www.tamilarangam.net

# பெண்மையும் வீரமும்



முனைவர் திருமதி சு. சிவகாமசுந்தரி

பாவை பப்ளிகேஷன்ஸ்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

www.tamilarangam.net

# பெண்மையும் வீரமும்

முனைவர் திருமதி சு. சிவகாமசுந்தரி
தமிழ்ப் பேராசிரியர் (ஓய்வு)
அவினாசிலிங்கம் மனையியல் பல்கலைக்கழகம்
தமிழ்ப்பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்.

பாவை பப்ளிகேஷன்ஸ்
Prop : பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்.,
142, ஜானி ஜான் கான் ரோடு,
சென்னை - 600 014.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பெண்மையும் வீரமும்

ஆசிரியர் : முனைவர் திருமதி சு. சிவகாமசுந்தரி

முதல் பதிப்பு : ஜூன் 1998

இரண்டாம் பதிப்பு : ஆகஸ்டு, 1999
மூன்றாம் அச்சு : மே, 2000
நான்காம் அச்சு : ஆகஸ்டு, 2000

© பதிப்பகத்தாருக்கு

ஓவியங்கள் : மாலி

ஒளி அச்சு : பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்.,

அச்சு : பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்.,

விலை : ரூ. 22.00

விற்பனை உரிமை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
41-பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,
சென்னை - 600 098.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# பதிப்புரை

www.tamilarangam.net

ஓர் அரசன் ஆண்டியாவதற்கு ஐந்து அல்லது ஆறு பெண்கள் பிறந்தால் போதும் என்று ஆதிகாலம் முதல் பேசப்பட்டு வருகிறது. பெண் குழந்தை பிறந்துவிட்டாலே பெரிய செலவுக்கு வழி பிறந்து விட்டது என்று பெற்றோர் வருந்துகிறார்கள். திருமணம் என்ற பெயரில் பெண் வீட்டாரிடம் வரதட்சணை வசூலிக்கும் கூட்டம் அதிகரித்து வருகிறது. தாலிகட்ட கூலி கேட்கும் வாலிபர்கள் பெருகி வருகிறார்கள். அதனால் பெண்ணினம் பல பிரச்சினைகளைச் சந்திக்கும் நிலைக்குத் தள்ளப்படுகிறது. பாரதி, பாரதிதாசன் போன்றோர் பெண்ணினத்தின் பெருமையைப் போற்றினார்கள். பெண்களுக்குச் சம உரிமை வழங்க வேண்டும் என்று வெறி கொண்டார்கள்.

பெண்கள் தன்னையும் பிறரையும் பேணும் தன்மை கொண்டவர்கள். பெண்கள் சமுதாயத்தின் கண்கள் போன்றவர்கள். பெண்களால்தான் சமுதாயம் என்ற அமைப்பு அமைக்கப்படுகிறது. அவர்கள்தான் புதியதோர் உலகம் செய்யும் குழந்தைகளை உருவாக்குகிறார்கள்.

பெண்கள் விழிப்புணர்வு பெறும் வகையில் நூலாசிரியர் முனைவர் திருமதி.சு. சிவகாமசுந்தரி அழுத்தம் திருத்தமான கருத்துகளை இந்நூலில் கூறியுள்ளார். தமிழ் இலக்கியத்தில் மனையியல் பற்றி ஆய்வு செய்து டாக்டர் பட்டம் பெற்ற நூலாசிரியர் பெண்களின் நிலை குறித்து நன்றாகவே ஆய்ந்து அலசி ஆணித்தரமான கருத்துகளை விளக்குகிறார்.

நாவுக்கரசி, செந்தமிழ்ச் செல்வி, அருட்பாமணி, தமிழறிஞர், நல்லாசிரியர், சிறந்த பெண்மணி ஆகிய பல பாராட்டுப் பட்டங்களைப் பெற்ற திருமதி.சு. சிவகாம சுந்தரி அவர்கள் பெண்ணினத்தின் பெருமை கூறத் தகுதி வாய்ந்தவர் மட்டுமல்ல, பெண்களை ஆற்றுப்படுத்தும் ஆற்றல் மிக்கவர்.

இந்நூல் தமிழ்ச் சமுதாயத்தால் ஏற்றுக் கொள்ளப்படும் என்றும் சமுதாயத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் என்றும் பெரிதும் எதிர்பார்த்து எமது பாவை பப்ளிகேஷன்ஸ் இந்நூலை வெளியிடுகிறது.

-பதிப்பகத்தார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நூலாசிரியர் பற்றி



முனைவர் திருமதி
சிவகாமசுந்தரி

தென்னாட்டின் நெற்களஞ்சியம் தஞ்சைக்கு அருகில் உள்ள திருவையாற்றில் பிறந்தவர் இந்தச் செந்தமிழ்ச் செல்வி. அண்ணாமலைப் பல்கலைக்கழகம் கண்ட ஆற்றல் மிக்கோரில் இவரும் ஒருவர். 'தமிழ் இலக்கியத்தில் மனையியல்' குறித்து ஆய்வு செய்தமைக்காக 1979ல், சென்னைப் பல்கலைக்கழகம் டாக்டர் பட்டம் வழங்கியுள்ளது. கோவை அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரி/பல்கலைக் கழகத்தில் 1965 முதல் 1988 வரைத் தமிழ்ப் பேராசிரியராகத் துறைத்தலைவராகப் பணியாற்றியவர். 1988 நவம்பர் முதல் 1996 மே வரைத் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் சிறப்புநிலைப் பேராசிரியர், பெருஞ் சொல்லகராதி முதன்மைப் பதிப்பாசிரியர், தொகுப்பியல் துறைப் பேராசிரியர்- தலைவர், துணைப்பதிவாளர், பதிவாளர் (பொறுப்பு) எனப் பல நிலைகளில் பணியாற்றியவர்.

பாரதியார் பல்கலைக்கழக அமைப்புக் குழுவிலும், ஆட்சிக் குழுவிலும் அங்கம் வகித்தவர். கல்விப் பொறுப்புகள் பல வகிப்பவர். தமிழகத்திலும், பம்பாய், கல்கத்தா,ஹௌரா, டில்லி, வாரணாசி போன்ற அயல் மாநிலங்களிலும் இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், அமெரிக்கா, தாய்லாந்து போன்ற வெளிநாடுகளிலும் தனது நாவன்மைக்காகத் தனி இடம் பெற்றவர். மேடைத் தமிழுக்குத் தனி முத்திரை பதித்துள்ள இவர் பெற்றுள்ள சிறப்புப் பட்டங்கள் ''நாவுக்கரசி'', ''செந்தமிழ்ச் செல்வி'', ''அருட்பா மாமணி'', ''தமிழறிஞர்'' பிறவாகும். கோவை அரிமா சங்கம் 'நல்லாசிரியர் ','சிறந்த பெண்மணி',விருதுகளை வழங்கியுள்ளது. வானொலியில் நூறு நிகழ்ச்சிகட்கு மேல் பங்கேற்றுள்ளார். பேச்சாற்றலுக்கும், நடிப்பாற்றலுக்கும் பல பொற்பதக்கங்கள் பெற்றுள்ள இவர் ஒரு நல்ல கவிஞரும் கூட. வடலூர் திரு அருட்பா இசைச்சங்கத்தின் செயலாளர்.

பன்மொழிப்புலவர் பல்கலைச் செல்வர் டாக்டர் தெ. பொ. மீ அவர்களது அருமை மாணவி. பொதுவுடைமைத் தலைவர் ப. ஜீவானந்தம் அவர்கள் இவரது அரசியல் குரு. வழிகாட்டி. தமிழ் மொழி நலம் பேண கோவைச் சிறையில் இருபத்தெட்டு நாட்கள் இருந்தவர். பதினைந்து நூற்களுக்கு ஆசிரியர். 1995-ஆம் ஆண்டில் தமிழக அரசின் திருவள்ளுவர் விருது பெற்றவர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பெண்களைப் பற்றிக் காந்தியடிகள்

' வாழ்க நீ எம்மான் இந்த வையத்து
நாட்டிலெல்லாம்
தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலை
தவறிக் கெட்டுப்
பாழ்பட்டு நின்றதோர் பாரத தேசம்
தன்னை
வாழ்விக்க வந்த காந்தி மகாத்மா நீ
வாழ்க! வாழ்க!!'

என்று மகாகவி பாரதியார் பாடி வாழ்த்தினார். 'பாழ்பட்டு நின்றதோர் தேசம் ' என்பதற்குப் பல காரணங்கள் உண்டு. அதனைப் பாரதிக் கவிஞன் நன்றாக அறிவான். கவிஞனின் பார்வையிலிருந் தும், மகாத்மாக்களின் பார்வையிலிருந்தும் எதுவும் தப்புவதில்லை. அவர்கள் யாருக்காக வும் அடிபணிந்து உண்மைக்கு மாறானவற்றைச் சொல்லுவதுமில்லை. இதனை நீள நினைந்து உணர்ந்த காரணத்தினால் தான் மகாகவி பாரதி

www.tamilarangam.net

மகாத்மா காந்தியடிகளைப் பற்றிச் சரியாகக் கணித்துக் கூற முடிந்தது.

பெரும் இராணுவ சக்தியும், பொருளாதாரப் பெரும் சக்தியும், ஏகாதிபத்திய வல்லரசை உலகில் நிலை நாட்டிய ஆங்கிலப் பேரரசைத் தன்னந்தனியே எதிர்த்துப் போராடிய பெருமை மகாத்மா காந்தியடிகளுக்கு உண்டு.

இந்திய நாட்டிலே பிறந்த பெருமை இந்திய மக்களுக்கு இருப்பது போலவே, காந்தி பிறந்த மண்ணிலே பிறந்த ஒவ்வொரு இந்தியனுக்கும் உண்டு. இது காந்தி நாடு. இது காந்தி யுகம். காந்தியடிகள் வாழ்ந்த பூமியில் நானும் பிறந்து வாழ்கிறேன். காந்தியடிகளை நான் பார்த்திருக்கிறேன். அவர் பேசியதை நான் கேட்டிருக்கிறேன் என்று பெருமையாகக் கூறுகின்றவர்கள் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். விடுதலை உணர்வை இந்நாட்டுப் பாமர மக்களுக்கு ஊட்டியவர் காந்தியடிகள். விடுதலை உணர்வை வளர்த்து அதனை ஆணுக்கும், பெண்ணுக்கும் பொதுமையாக்கிப் பெருஞ்சக்தியை உடைய மக்களை வாழ்த்தித்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தலைமையேற்கச் செய்தவர். ஒவ்வொருடைய கண்களிலிருந்து வரும் கண்ணீரைத் துடைக்க வேண்டுமென்பதே அவர் விருப்பம். தியாகத்தின் பெருமையை, சக்தியின் உயர்வை, சத்தியத்தின் நேர்மையை மதித்தவர். 'தியாகம், சக்தி, சத்தியத்தின் வடிவமாக இந்த நாட்டுப் பெண்கள் இருக்கிறார்கள்' என்பதை மனமார ஏற்றுக்கொண்டவர். கட்டுப்பாட்டையும் சகிப்புத் தன்மையையும் ஊக்கத்தையும் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையையும் தியாகத்தையும் கொண்ட பெண்களால் அவர்கள் ஒத்துழைப்பால் நாட்டு விடுதலை மிக எளிதாகப் பெற முடியும். பொருளாதாரத்தை உயர்த்த முடியும். வீட்டையும், நாட்டையும் சுத்தமாக்கமுடியும். வேண்டாம்எனஒதுக்கப்படும் கழிவுப்பொருட்களைக்கருப்பொருளாக்கமுடியும் எனநம்பினார். மகாத்மாகாந்தியடிகளின்கருத்துக்கள் ஒரு காலத்தில் ஓங்கி நின்று இன்னொரு காலத்தில் ஒதுக்கித் த்ள்ளப்பட வேண்டியவை அல்ல. அவை வலிமையும், உறுதியும் மிக்கவை. 'எனது வாழ்வே எனது செய்தி' என நினைந்து, உணர்ந்து கூறியவர். எந்தக் கட்டாயத்திற்காகவும், கருத்துக்களுக்காகவும் அடிபணிந்து தமது கொள்கைளை விட்டுக் கொடுக்காதவர். அவரது நம்பிக்கை இந்த நாட்டு மக்களிடமிருந்

www.tamilarangam.net

தது. அதிலும் குறிப்பாகப் பெண்களால் பல காரியங்களைச் சாதிக்க முடியுமென உறுதியாக நம்பினார்.

## அடிப்படைக் காரணம்

பெண்களைப் பற்றிக் காந்தியடிகள் மிகுதியான நம்பிக்கைக் கொண்டிருந்ததற்குச் சில அடிப்படைக் காரணங்கள் உண்டு. அவரே இவ்வாறு குறிப்பிடுவார். ' என் தாயார் தான் எனக்கு முதல் ஆசான். பூஜை அறையில் அவர் சொல்லி வணங்கும் கீதை சுலோகங்கள் என் மனதில் பசுமரத்தாணிபோல் பதிந்தது. பசித்த ஒருவருக்கு உணவு கொடுத்து விட்டு உணவு கொள்ளும் பழக்கங் கொண்ட எனது தாயாரால் தான் இந்நாட்டில் உள்ள அனைவரும் பசியாற வயிறு நிறைய உணவு கொள்ளவேண்டுமென்ற எண்ணம் எனக்கு வந்தது. எனது தந்தையாரிடம் எனது தாயார் பேசிய முறை, எடுத்துக்கூறிய யோசனைகள்,தந்தையாரின்நலனுக்காகத்தாயார் மேற்கொண்டவிரதங்கள்,உண்ணாநோன்புகள் அனைத்தும்பிற்காலத்தில் நான் எடுத்த முடிவுகள் பலவற்றிற்கு முன்னோடியாக இருந்தன. அனுபவ ஞானம் அதிகம் கொண்டிருந்த எனது தாயாரை முன்மாதிரியாக வைத்துக்கொண்டே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கல்வி பற்றிய பல முடிவுக்கு நான் வந்தேன். சமயங்கள், மதங்கள், மார்க்கங்கள் பற்றிய என் தாயாரின்கருத்துக்கள்தான்பிற்காலத்தில்என்னை ஈசுவர அல்லா தேரே நாம் ' எனச் சொல்ல வைத்தது. சிந்திக்க வைத்தது. உண்ணா நோன்பு மேற்கொள்வது பற்றிய கடுமையான பிடி வாதம், கொள்கை கூட நான் அவரிடமிருந்து தான் கற்றுக்கொண்டேன். என் தாயாரின் தாக்கமும், எனது மனைவி கஸ்தூரிபாயின் கருத்துக்களும் என்னில் மிகுந்த சிந்தனையை ஏற்படுத்திப் பல முடிவுகளை மேற்கொள்ள முடிந்தது. இவ்வாறு காந்தியடிகள் தனது சத்தியசோதனையில்மாதர்களைப்பற்றி அவர் கூறியகருத்துக்கள்தெளிவாகஉள்ளன.பெண்களைப் பற்றிக் காந்தியடிகள்எண்ணத்தை உணர்ந்து அதன்படி நடந்தால் இன்று சமுதாயத்தில் உலவி வரும் பல சிக்கல் களுக்குத் தீர்வு காணமுடியும். காந்தியடிகளுடன் இருந்த ஜவகர்லால் நேரு, சர்தார் வல்லபாய் பட்டேல் போன்றவர்களும் இவருடைய கருத்தைப் பிரதிபலித்ததற்கு இதுவே காரணமாகும்.

காந்திய சிந்தனைக்கு வித்திட்ட தாய் மார்கள்:



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



www.tamilarangam.net

காந்தியடிகளின் வாழ்க்கையில் பெற்றோர் பக்தி, உண்மை, சத்தியம், நேர்மை இவையெல்லாம் மிக முக்கிய இடத்தைப் பெற்றிருந்தன. இந்த அருங்குணங்களையெல்லாம் அவர் பள்ளிக்கூடத்தில் கற்றாரா? எந்தப் பாசறையிலிருந்து கற்றார்.

ஆரம்பப்பள்ளி, உயர்தரப் பள்ளி தனக்கு கூட்டல், கழித்தல், வகுத்தலை மட்டுமே சொல்லித் தந்தது. பயம், கூச்சம், யாருடனும் கலகலப்பாக மனம் விட்டுப் பேசுவது இல்லாதது போன்றவற்றையே வளர்த்துத் தந்திருக்கிறது. பள்ளிப் புத்தகங்களைத் தவிர வேறு புத்தகங்கள் படிக்கும் வாய்ப்பில்லாமல் இருந்த காந்தியடிகளுக்கு அவரது தாயார் ' சிரவணனின் பிதுர் பக்தி நாடகம் ' என்ற நூலினைக் கண்களில் படும்படியாகச் செய்திருக்கிறார். சிரவண்னன் தனது பெற்றோரிடம் கொண்டிருந்த அழுத்தமான பக்தியை வளர்த்துத் தந்தது. கண்ணிழந்த தனது தாய் தந்தையரைக் கூடையில் வைத்துக் காவடியாகத் தோளில் சுமந்து கொண்டு செல்லுவது பற்றி அவர் பார்த்த படம் அவர் நெஞ்சில் ஆழப் பதியவைத்துவிட்டது. கண்ணிழந்த நிலையில் கூடத் தனது துன்பத்தைச்

www.tamilarangam.net

சிரவணனின் தாய் பெரிதாக நினைக்காமல், தங்களுக்குத் தொண்டு செய்து வரும் மகனைப் பற்றி அவர் கொண்ட கவலை, கட்டுப்பாட்டுட னும், அன்பு, மரியாதை போன்ற பண்புகளை எந்தக் காலத்திலும் கைவிடாமலிருக்க வேண்டுமெனப் போதித்தது தனக்கு மிகவும் பிடித்தமாக அமைந்ததோடு, வாழ்க்கையில் கடைசிவரை பின்பற்ற சிரவணன் தாய் செய்த உபதேசம் தனக்குத் துணையாக இருந்ததென் பார். அது போலவே, அரிச்சந்திரன் நாடகம் பார்த்து விட்டு, 'அரிச்சந்திரனைப் போலத் தாமும் ஏன் சத்தியசீலனாக ஆகக்கூடாது?' என்ற எண்ணத்தை வலுப்படுத்த தனது தாயார் புத்லிபாய் கொடுத்த பன்முக விளக்கங்கள் தான் தனது பிற்காலத்தியச் சிந்தனைத் தெளி விற்குக் காரணமென்பார். குழந்தையைக் கரு வாக வயிற்றில் சுமக்கும் பொழுதும், பின்னர் நெஞ்சில் சுமக்கும் பொழுதும், பின்னர் வளர்ப் பில் காட்ட வேண்டிய நுட்பமான கருத்துக் களைக் காந்தியடிகள் தெளிவாகக் கூறுவார். பெற்றோர்களின் முகச்சாயல், உடல் அமைப்பு, தோற்றம் எப்படிக் குழந்தையைத் தாக்கி உருவாக்கித் தருகிறதோ அதைப் போலத்தான் அவர்களின் குணமும், சிந்தனையும் தாக்கும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எனவே கருவுற்ற தாய்மார்களைக் கவனமுடன் பாதுகாப்பதும், சிரவணன், அரிச்சந்திரன் போன்ற கொள்கைப் பற்றுடைய ஒரு குழந்தையைப் பெற்றுநாட்டுக்கு முன் உதாரணமாக விளங்க வளர்ப்பதுதான் பெருங்கடமை என்பார். காந்தியடிகளின் இக்கருத்து எந்தநூற்றாண்டுக்கும் பொருந்துமென்பதே உண்மை.

## பெண்கள் கல்வி பற்றிய கருத்து

நம் நாட்டுப் பெண்கள் அனைவரும் படிக்க வேண்டும். வாழ்க்கையின் ஆதாரமாகிய கல்விக்கு வேறு எந்த ஆதாரத்தாலும் தொல்லை வரக்கூடாது. பொருளாதாரம் தடையாகவே இருக்கக்கூடாது. தங்கள் கிராமத்தில் பள்ளிக் கூடம் இல்லையென்பதற்காகவே, படிப்பதற்காக வெளியூருக்கு நடந்தோ, வண்டியிலோ போகவேண்டுமென்பதற்காகவோ பெண் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பாமல் இருந்து விடக்ககூடாது. ஆண்பிள்ளகளோடு சேர்த்துப் படிக்கவைக்கவேண்டியது வருகிறதே என்ற எண்ணம் தடையாக இருக்கக்கூடாது. சமையல் செய்யவும், கோவிலுக்குப் போகவும், குடும்ப நலனுக்காகவும், குறிப்பாகக் கணவன்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குழந்தைகள் நலன் வேண்டி விரதம் இருக்க வேண்டியபெண்களுக்கு அனுபவப் படிப்பு மட்டும் போதுமெனக் கூறக்கூடாது. பெண்கள் கல்வி கற்பது அவசியம். அவர்கள் கற்கும் கல்வி அவர்களது குழந்தைகளைப் பாது காக்கும். அறிவுடையவர்களாக்கும். முரட்டுச் சிந்தனையி லிருந்து விடுவிக்கும். பக்குவம் நிறைந்த உள்ளத்தோடு, அவசியத்தை உணர்ந்து சொல்லுகின்ற வழியில் சொல்லித் தரும் முதல் ஆசானாகத் தாய் தான் விளங்குகின்றாள். ஒரு மனிதனுக்கு இருக்க வேண்டிய அவசிய அடிப் படை உணர்வுகளாகிய பாசம், இரக்கம், கருணை, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை, சமத்துவம், சகோதரத்துவம், அகிம்சை பற்றிய குணங்களையெல்லாம் தாய்தான் சொல்லிக் கொடுக்க முடியும். இளங்குழந்தைக்கு அவள் சொல்லித் தருவது போல வேறு யாராலும் சொல்லித் தரமுடியாது. கதைகள் சொல்லுவதில் பெண்கள்தான் வல்லவர்கள். அதற்கு ஏற்றாற் போல அவர்கள் குரல் அமைந்துள்ளது. பேசினாலும், பாடினாலும் இனிமையாக இருக்கிறது. இவற்றையெல்லாம் கொண்டு விளங்கும் பெண் படித்தவளாக இருந்தால் பக்குவமாகச் சொல்லித் தர முடியும். காலம்

மிகவும் அருமையானது. ஐந்தில் வளைந்தால் தான் ஐம்பதில் வளைய முடியும். ஐந்தில் வளையவைக்கும் ஆற்றல் தாயிடம் தான் உள்ளது. அவளது அன்பு, கண் டிப்பு, கண்ணீர், வேண்டுகோளால் எல்லாவற்றையும் சாதிக்க முடியும். வருங்காலச் சந்ததி, அது ஆணாக இருப்பினும். பெண்ணாக இருப்பினும் வள மோடு வாழத் தாய் கற்றவளாக இருப்பது தான் முக்கியம். இதற்காகவாவது பெண்களுக்குக் கல்வி கற்றுத் தர வேண்டும். தனது மனைவி கஸ்தூரிபாய் காந்திக்கு எழுத்து வாசனை இல் லாததால் தான்பட்ட பாட்டையெல்லாம் காந்தி யடிகள் விளக்குவார். அவளுக்குக் கல்விஅறிவு ஏற்பட தான், எடுத்துக் கொண்ட கடுமையான முயற்சி கள் விளைவாகக் குஜராத்தி மொழியில் பேச வும், எழுதவும் அவர் பெற்ற வெற்றியைக் குறிப்பிடுவார். தங்களது மூத்த மகன் ஹீராலால் செய்த தவறுகளுக்கெல்லாம் காரணம் கஸ்தூரி பாயின் கல்விக் கண்காணிப்பு இன்மையே எனக் கூறி வருந்துவார். பெண்கள் தங்கள் குழந்தைகள் நல னுக்காக கற்பது அவசியம். பரிசுத்தமான அன்பினால் சாதிக்கமுடியாதது எதுவுமில்லை என்பது காந்தியடிகளின் கருத்து.

www.tamilarangam.net

## பெண்களின் திருமணம் பற்றிய கருத்து

'திருமணம் என்பது சாதாரணமான சடங்கு அல்ல' என்பது காந்தியடிகள் கருத்து. திருமணம் என்ற பெயரால் சொத்துக்களை வீணாக்குவது, ஆடம்பரச் செலவு செய்வது, ஒரு நாளைக்கு அணிந்து கொள்ளுவதற்காகப் பல ஆயிரங்களைச் செலவழித்து ஆடைகள் வாங்குவது, தேவைக்கு அதிகமான நகைகள் செய்வது, அவற்றை அணிந்து கொள்ளாமலேயே' பார்த்துப் பார்த்துப் பெட்டியில் பூட்டிவைப்பது, தேவையை மிஞ்சி உணவு தயாரித்து வீணாக்குவது, தேவைப்பட்டவர்களுக்கு உணவுதராமல் தேவையற்றவர்களை அழைத்து வருந்தி, வருந்தி உண்ணச் செய்வது, ஆடம்பரத்தைமட்டுமே குறிக்கோளாகவைத்துக்கொள்ளுவது போன்றவை திருமணத்தில் தவிர்க்கப்பட வேண்டுமென்பது காந்தியடிகளின் பொதுவான கருத்து.

மற்றொரு பொதுக் கருத்தைக் காந்தியடிகள் மிகவும் வற்புறுத்துவார். திருமணத்தில், பெண்களின்பங்கு மிகமிகக் குறைவானது போலக் காட்டுவதும், அவர்கள் விருப்பதிற்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முதலிடம் தராமல் போவதென்பது தவிர்க்கபட வேண்டும். திருமணத்தின் மூலம் பெண்களை அடிமைப்படுத்தக்கூடாது. மாப்பிள்ளைக்கும், பெண்ணுக்கும் மனப்பொருத்தம் சமமாக இருக்க வேண்டும். பெண்ணின் விருப்பத்தை அறிய வேண்டும். குறிப்பிட்ட வயதைப் பெண்கள் அடைந்தபிறகே திருமணம் பற்றி யோசிக்க வேண்டும். குழந்தைமணம், பொருந்தா மணம் சட்டரீதியாக நிறுத்தப்பட வேண்டும் எனக் காந்தியடிகள் விரும்பினார்.

உயர்நிலைப்பள்ளியில் படித்துக்கொண்டிருந்த காந்தியடிகளுக்குத் திருமணம் ஆனதால் ஏற்பட்ட இழப்புகளைப்பற்றியெல்லாம் விரிவாகத் தான் எழுதி!! சத்தியசோதனையில் குறிப்பிட்டுக் காட்டுவார்.

திருமணத்தின் மூலமாக ஆணும், பெண்ணும் தங்கள் கருத்துக்களை மனம் விட்டுப் பேசிக் கொள்ள வேண்டும். அனைத்து வகையான மகிழ்ச்சிக்கும் திருமணம் வகை செய்ய வேண்டும். பெண்களை அடிமைப் படுத்தவும், சிறுசிறு வேலைகளைச் செய்யும் வேலைக்காரியாகவும் கருதிவிடக் கூடாது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காந்தியடிகள் தாம் படித்த ''தாம்பத்தியக் காதல்'', ''சிக்கனம்'', ''குழந்தை மணங்கள்'' பற்றியபிரசுரங்கள் விவாதித்திருந்த செய்திகள் மூலம் கணவன் மனைவியின் நம்பிக்கைக்குரிய வளாக நடக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்த தாகக் குறிப்பிடுவார். பின்நாளில் தாம் கூறிய இந்தக் கருத்துக்களை மறுத்தும் பேசுவார். மனம் வைத்து நடத்த வேண்டிய திருமண வாழ்க்கை யில் உபதேசத்திற்கு இடமே இல்லை. அனு பவம்தான் அனைத்தையும் சொல்லித்தர வேண் டும். எல்லாவற்றிலும் பெண்ணுக்குச் சமபங்கு அளிக்க வேண்டும். பெண்ணின் குணம், ஈடு பாடு, ஒழுக்கம் தவிர வேறெதையும் எதிர் பார்க்கக் கூடாது. திருமணம் வியாபாரமாக்கப் படுவதைக் காந்தியடிகள் கடுமையாக எதிர்த் தார். சடங்குகள் குறைக்கப்பட வேண்டும். பல நாட்களாகத் திருமணம் பற்றி யோசித்து, யோசித்துச் செய்யப்படும் குழப்பங்கள் விலகி தெளிவாக இருக்க வேண்டும். திருமணத்தால் பெண்ணின் சுகம் குறையக் கூடாது. சுமை ஏறக்கூடாது. தனக்குக் கிடைத்த புதிய வாழ்க்கை குறித்துப் பெண் எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டுமென்று வற்புறுத் தினார். குழந்தை மணத்திற்கு முற்றுப்புள்ளி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வைக்க வேண்டும். கணவன் இறந்துவிட்டால் உடனே பெண்களை உடன்கட்டை ஏற்றும் பழக்கம் அடியோடு ஒழிக்கப்பட வேண்டும். காட்டுமிராண்டித்தனமான பர்தாமுறை தேவை இல்லை. காமக்கலப்பில்லாத குடும்ப நலம் காப்பாற்றப்பட வேண்டும். திருமணத்தின் மூலமாகத் தனக்கொரு நல்ல தோழி, நல்ல மருத்துவர், நல்ல மதி அமைச்சர், நல்ல ஆசான், நல்ல நீதிபோதகர் கிடைத்திருப்பதாக ஆண் மகன் எண்ண வேண்டுமென்பதில் காந்தியடிகள் உறுதியாக இருந்தார்.

காந்தியின் பெயரால் காாயங்கள் அமைக்க எண்ணும் நாம் இக்கருத்துக்களை மனதில் பதிய வைத்துச் செயல்படுவது மிக முக்கியம்.

## பெண்ணால் முடியும்

காந்தியடிகள் தன் வாழ்க்கையில் சத்தியம், மது அருந்தாமை, புலால் உண்ணாமையை மேற்கொள்ளக் காரணமாக இருந்தவர் அவரது தாயார் தான். இந்திய மக்களுக்கென இருந்த தனிப்பண்பைத் தனது மகன் தன் வாழ்க்கையில் இறுதிவரை மேற்கொள்ள வைக்கும் வகையில்

www.tamilarangam.net




வாழ்க்கைப்பாதைக்குப்
பெண் வழிகாட்டி

www.tamilarangam.net

அடித்தளமிட்டவர் அவரது அன்னையார் தான். படிப்புக்காக வெளிநாடு செல்லவிருந்த தன் மகனிடம் அன்னையார் பெற்ற உறுதிமொழி தான் காந்தியடிகளை அகிம்சைத் தத்துவத்தில் இறுதிவரை நிலை நிற்க வைத்தது.

பல கடவுள் நம்பிக்கை கொண்ட இந்திய மண்ணில் பிறந்த காந்தியடிகள் 'சத்தியமே தெய்வம்', 'அன்பே தெய்வம்', 'உண்மையே தெய்வம்', 'வாய்மையே தெய்வம்' எனக் கூறி அனைவரையும் பிரார்த்தனையில் ஈடுபடுத்திய தற்குக் காரணம் அவரது அன்னையார் தான்.

ஓரிடத்தில் காந்தியடிகள் இவ்வாறு எழுது வார். அதாவது ''பெண்ணின் சக்தியால் மகத் தான காரியங்களைச் சாதிக்க முடியும் என்பதற்கு என் தாய் தான் எனக்கு முன்னோடி, வழிகாட்டி எல்லாம்'' என்பார்.

''கடவுளிடம் பக்தி செலுத்துவது, அவ ரிடம் மன்றாடுவது, அதற்காக உடலை வருந்தி நோன்பு மேற்கொள்ளுவது, கோயிலுக்குப் போவது, பசித்தவர்களுக்குச் சோறுபோடுவது போன்றவற்றின் மகத்துவத்தையெல்லாம் என்

www.tamilarangam.net

தாய்வழி தான் அறிந்தேன். ஒருமுறை என் மூத்த அண்ணன் சிறிது நோய்வாய்ப்பட்டார். வைத்தியர் மருந்து கொடுத்தும் முழுமையான பலன் கிட்டவில்லை. இந்நிலையில் என் தாயார் செய்தவை என் நினைவில் இன்றும் பசுமையாக இருக்கிறது. விடியலில் குளிர்ந்த நீரில் குளித்து, சுத்தமாகத் துவைத்த ஆடை அணிந்து, எதுவும் அருந்தாமல் மூடிய கண்களுடன், கூப்பிய கைக ளுடன் அண்ணன் பக்கத்தில் அமர்ந்திருப்பார். சில நேரங்களில் வாயும் ஏதோ முணுமுணுக்கும். யாருடைய காதிலும் கூட அது விழாது. சில நேரங்களில் கண்கள் உடைந்துவிட்டதோ, என எண்ணும்படியாகக் கண்ணீர் கண்களிலிருந்து ஓடும். அழுதுகொண்டே, எல்லோருக்கும் கேட்கும்படியாகச் 'சாமி காப்பாத்து', 'சாமி காப்பாத்து' எனக் கூறிப் புலம்புவார். சில நேரங்களில் எனது அடுத்த அண்ணனையும், என்னையும் கூடப் பக்கத்தில் அழைத்து வைத்துக் கொண்டு கூட்டாக வழிபடுவார். என் தந்தையாரும், வீட்டில் உள்ள உதவியாளர்களும் கூட இவ்வழிபாட்டில் கலந்து கொள்ளுவார்கள். ஒருவாரக் காய்ச்சலுக்குப் பிறகு எனது அண்ணன் பிழைத்தெழுந்தார். என் அன்னையின் தனிப் பிரார்த்தனையாலும், எங்களின் கூட்டுப் பிரார்த்

www.tamilarangam.net

தனையாலும் அண்ணன பிழைத்துக் கொண்ட அதிசயம் பற்றி எண்ணிப் பார்க்கத் தொடங்கி னேன். மனிதனால் முடியாத காரியத்தை இறைவன் முடித்துக் கொடுப்பான். ஒருமனதாக அவனை நம்ப வேண்டுமென்பதை அறிந்து கொண்டேன். மனிதனால் அசைக்க முடியு மென்ற காரியங்கூட ஈசுவர அருள் இருந்தால் மட்டுமே சாதிக்க முடியும். இதுபோன்ற செய்தி களை நான் அறிந்துகொண்டது எனது தாயிட மிருந்து தான். இறை நம்பிக்கையூட்டுதல், பிரார்த்தனை, கூட்டுப் பிரார்த்தனை, சர்வமதப் பிரார்த்தனையில் எல்லாம் பிற்காலத்தில் நான் ஈடுபாடு கொள்ளக் காரணமாக இருந்தவர் எனது தாய்தான். யாராலும் விளங்கிக் கொள்ள முடியாதவற்றைக் கூட எழுதப்படிக்கத் தெரியாத ஒரு பெண் எவ்வளவு எளிமையாகச் சொல்லிக் கொடுத்து விடுகிறாளென்பதை உணர்ந்து கொண்டேன். சிறுவயதில்அவர் தன் தாயிடம் கற்றுக்கொண்ட படிப்பினைப் பெண்ணால் முடியுமென்ற நம்பிக்கையைக் கொஞ்சம் கொஞ்சமாகத் தன் உள்ளத்தில் உரமேற்றிக் கொள்ள வைத்ததாகக் குறிப்பிடுவார்.

www.tamilarangam.net

தன் தாயிடம் தான் கற்றுக்கொண்ட பாடத்தை மீண்டும் ஒருமுறை பயிற்சி பெறவும், புதுப்பித்துக் கொள்ளவும் தென்னாப்பிரிக்காவில் அன்னையார் கஸ்தூரிபாய் காந்தி வழியாகக் கற்றுக் கொண்டதாகவும் எழுதுவார். நோய் வாய்ப்பட்ட கஸ்தூரிபாய் புலால் உணவு உண்டால்தான் விரைந்து நலம் பெறவும், பிழைத்துக் கொள்ளவுமான வாய்ப்பு உண்டு என மருத்துவர்கள் கூறியும் பிடிவாதமாக மறுத்துவிட்டார். கஸ்தூரிபாயின் பிடிவாதம் கொண்ட மன உறுதிப்பாடு இந்தியப் பெண்களில் சரிபாதியினருக்கு இருந்துவிட்டால் விடுதலை பெறுவது மிக எளிதான நிகழ்ச்சியாகிவிடுமெனக் கூறத் தொடங்கினார். தனது தாயும், தனது மனைவியும் தனக்குக் காட்டிய வழிகள் பெண்ணினம் முழுவதுமே தனக்குக் காட்டிய வழியாக எடுத்துக் கொள்வதாகக் காந்தியடிகள் அடிக்கடிக் குறிப்பிட்டுக் காட்டுவார். சாதி, இன, மத, பேதத்திற்கு இடங்கொடாமல் கஸ்தூரிபாய் நடந்து கொண்ட போக்குத் தென்னாப்பிரிக்காவில் தனது பணியை மிக எளிதாக்கி விட்டதாகவும் மனந்திறந்து சொல்லுவார். ஒரு செடிக்கு விடும் தண்ணீர் சரியாக, முறையாக, பக்குவமாக விடப்படுமேயானால் அந்தச் செடி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆலமரம் போல் குடும்பத்தைக்
கட்டிக்காப்பவள் பெண்

www.tamilarangam.net

மரமாகிப் பூத்துக், காய்த்து, கனிந்து, கனி விதையாகி மீண்டும் ஒரு தலைமுறையை உரு வாக்கி விடுவதைப் போலப் பெண்ணை முறையாக வளர்த்து வழிகாட்டத் துவங்கி விட்டால் சமூகத்தில் பாதிப் பணி மிகச் சிறப் பாக நிறைவேறிவிடுமென்பது அண்ணல் காந்தியடிகளின் கருத்தாகும்.

## சுதந்திரத்தின் அளவுகோலாக

நாட்டு விடுதலை பற்றிய நாட்டம், செயல் பாடு அண்ணல் காந்தியடிகளின் காலத்தில்தான் உச்சநிலையை அடைந்திருந்தது. விடுதலை பெறுவது, விடுதலையின் அளவுகோலாக எதை வைத்துச் சொல்லுவதென்ற வினா அண்ணலின் முன் பலரால் எழுப்பப்பட்டது. மூன்று வேளை யும் வயிறார உண்ணுவது, உடுப்பது, பயமின்றி உறங்குவது, நாடு தொழில்மயமாவது, இயந்திர மயமாவது, வேளாண் உற்பத்திப் பெருகுவது, சேமிப்பது, அந்நிய நாடுகளுக்கு வழங்குவது, இராணுவத்தைப் பலப்படுத்துவது போன்ற பல காரணங்கள் சொல்லப்பட்டது. காந்தியடிகளுக் குப் பக்கத்திலிருந்த பலர் புரிந்தும், புரியாதது மாகத் தலையாட்டிக் கொண்டிருந்தனர். அதில்

www.tamilarangam.net

ஒருவர் தங்களுக்கு மிகவும் புரியும்படியாகக் கூறும்படியாகக் கேட்டார். அனைவருக்கும் புரியும்படியான அளவுகோல் கொண்டு நம் நாட்டுச் சுதந்திரம் குறித்து விளக்குவதாகக் கூறி விளக்கிய விளக்கம் பெண்கள் பற்றிக் காந்தி யடிகள் கொண்டிருந்த எண்ணத்தை மிகத் தெளிவாகக் காட்டுகிறது.

நகைகள் மீது இந்தியப் பெண்களுக்கும், ஆண்களுக்குமுள்ள ஈடுஇணையற்ற மோகம் அனைவரும் அறிந்ததே. அந்நியர் ஆட்சி ஏற் படுத்திக் கொடுத்திருக்கக்கூடிய நிலையையும் யாரும் மறப்பதற்கில்லை. தினம், தினம் பெரும் பிரச்சினைகள். எங்கும் பலாத்காரம், சமூக விரோத சக்திகளின் ஊடுருவல், களவு, கொள்ளை, போராட்டங்கள், பண்பாட்டுச் சிதைவு, விலைவாசி உயர்வு, மக்கள் தொகைப் பெருக்கம், வேலை இல்லாத் திண்டாட்டங் களென்ற நிலைநாட்டில்அலைமோதிக்கொண்டி ருக்கின்றன.இந்நிலையில் இளம் பெண்களின் நிலையோ கவலைக்கிடமாக உள்ளது. எங்குப் பார்த்தாலும் பாலியல் பலாத்காரங்கள். பெண் ணுக்குப் பாதுகாப்புத் துளியும் இல்லை. இந் நிலையில் அழகான இளம்பெண் ஒருத்தி, நட்ட

www.tamilarangam.net

நடு இரவு பன்னிரண்டு மணிக்கு உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை எவ்வளவு நகைகள் அணிந்து கொள்ள முடியுமோ அவ்வளவு நகைகள் அணிந்து கொண்டு ஒரு தெருவின் தொடக்கத்திலிருந்து முடிவு வரைத் தன்னந்தனி யாக அந்த இராத்திரி நேரம் நடந்து செல்ல வேண்டும். அவள் பயணம் தொடங்கிய இடத் திற்கே மீண்டும் வரவேண்டும். அச்சம் தவிர்த்த நடை, நிமிர்ந்த நடை, யார்க்கும் அஞ்சாத போக்கு அவளிடம் களிநடம் புரியவேண்டும். பாடகம், தண்டை, கொலுசு அணிந்த அவளது கால்விரல் நகத்திற்குக் கூட யாராலும் அவ ளுக்குத் தீமை வரக்கூடாது. திருடரால் பய மில்லாத ஒரு சூழல், தன் நகை களவாடப் பட்டுவிடுமோ என்ற அச்சமில்லாத போக்கு - நாட்டில் தனக்கும், தன் உடைமைக்கும் பாது காப்பு இருக்கிறதென்ற நம்பிக்கை அந்த இளம் பெண் மனதில் எப்பொழுது உதயமாகிறதோ அப்பொழுதுதான் நாடு விடுதலை பெற்றதாகப் பூரணமாக நம்புவேன். இதுதான் சுதந்திரம் பற்றிய தன்னுடைய அளவுகோல் எனக் கூறக் கேட்டவர்கள் வியந்து நின்றனர். ஓவியத்திலும், காவியத்திலும் வரைய முடியாததை - மனத் திரையில் கள்வர் இல்லாச் சமுதாயத்தை - இளம்

www.tamilarangam.net
பெண்ணுக்கு இருக்கும் பாதுகாப்பு மிகுந்த சமுதாயத்தைக் காந்தியடிகள் படம் பிடித்துக் காட்டியதிலிருந்து பெண் மக்களைப் பற்றிக் காந்தியடிகளின் சிந்தனை தெளிவாகத் தெரிகிறது. பெண்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கும் நாடுதான் வணக்கத்திற்குரியதெனக் கூறிய காந்தியடிகளின் கருத்தும் தெளிவாகிறது.

## பல துறையிலும் பெண்கள்

தான் ஈடுபாடு கொண்ட காங்கிரசு கட்சியிலும், தலைமைப் பொறுப்பிலும், செய்திகளை விளக்குவதிலும், தொடர்புடைய அனைத்திலும் பெண்கள் சமபங்கு கொள்ள வேண்டுமென்பது காந்தியடிகளின் விருப்பம். தில்லையாடி வள்ளியம்மை மீது அவர் கொண்டிருந்த பக்தி சொல்லி முடியாது. சத்தியாக்கிரக இயக்கத்தில் கஸ்தூரிபாய் தனக்குக் கொடுத்த ஒத்துழைப்பினால்தான் தன்னால் இயற்கை யாகக் காரியங்களைச் சாதிக்க முடிந்ததென்பார்.

வயலில் வேலை செய்யும் கூலிப் பெண்ணாக இருந்தாலும், ஆலையில் வேலை செய்யும் தொழிலாளிப் பெண்ணாக இருந்தாலும், நக

www.tamilarangam.net



www.tamilarangam.net

விரலில் கூட அழுக்குப்படாமல் அலுவலகத்தில் அமர்ந்து வேலை செய்யும் பெண்ணும், வீட்டிலிருந்து சமையல் வேலைகளை மட்டுமே கவனிக்கப் பிறந்ததாகக் கூறும் பெண்ணும் நாட்டு மக்களுக்குத் தரும் செய்திகள் மகத்தானவையெனக் காந்தியடிகள் எண்ணினார்.

சாதாரண கரம்சந்த் மோகனதாசு காந்தியை மகாத்மா காந்தியாக்கிய பெருமை அன்னை கஸ்தூரிபாய் காந்திக்கு மட்டுமே உண்டு என நெகிழ்ந்து கூறுவார்.

## பொருளாதார உயர்வுக்கான கைராட்டை

வீட்டிலிருந்தவாறே ஒவ்வொரு பெண்ணும்

"ஆடுராட்டே சுழன்றாடு ராட்டே
சுழன்று சுழன்று சுழன்றாடு ராட்டே"

என நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை பாடியவாறு இராட்டினத்தைச் சுற்றி நூல் நூற்கத் துவங்கி விட்டால் இந்தியாவின் பொருளாதாரப் பிரச்சினையில் பாதி தீர்ந்து விடுமெனக் காந்தியடிகள் நம்பினார். அதற்கான வழிமுறைகளையும் விளக்கிக் கூறினார். வீட்டுப் பொருளா

www.tamilarangam.net
தாரத்தின் முக்கியத்துவத்தையும், மேன்மையையும் பெண்கள் உணர்ந்து கொண்டு செயல்படத் தொடங்கிவிட்டால் நாட்டுப் பொருளாதாரம் உயர்ந்துவிடும். வீட்டுக் கவலை இல்லாமல் வாழும் மேன்மையை ஆண்மகன் பெற்றுவிடப் பெண்மகள் உதவினால் நாட்டு விடுதலையென்பதும், அடிமைச்சங்கிலி உடைபடுவதும், மொழிவிடுதலைபெறுவதும், தாய்நாட்டுப்பண்பாடு கற்பதும் மிக எளிதாகிவிடும்.

பெண்களைப் பற்றிக் காந்தியடிகள் கூறியுள்ள கருத்துக்களை மனதில் வாங்கிச் செயல்பட்டால் நாடு அனைத்துச் சிறப்புகளும் பெற்று உயர்வடையுமென்பது உண்மை. சமுதாயத்தில் செம்பாதியாக விளங்கும் பெண்களைப் புறக்கணித்துவிட்டு, ஒதுக்கி விட்டு, தள்ளிவைத்து விட்டு, அடிமைப்படுத்திவிட்டு எந்தக் காரியத்தையும் சாதிக்க முடியாது. பழைய பண்பாட்டுச் சீர்குலைவு ஏற்படாமல், புதிய மேம்பாட்டுத் திட்டமும், உடைபடாமல் இணைந்து வாழ்வதற்குப் பெண்கள் மதிக்கப்பட வேண்டும். உயர்வடையச் செய்ய வேண்டும். இறைவனின் விருப்பமும் அதுதான் என்பதே அண்ணல் காந்தியடிகளின் கருத்து.

★ ★ ★

www.tamilarangam.net

# விடுதலைப் போராட்டத்தில் பெண்கள்.

'ஆடுவோமே பள்ளு பாடுவோமே
ஆனந்த
சுதந்திரம் அடைந்து விட்டோமென்று
ஆடுவோமே'

என்று நாட்டுக்கு விடுதலை கிடைப்பதற்கு முன்னரேயே பாடி மகிழ்ந்தான் மாக்கவிஞன் பாரதி. இந்திய விடுதலை உறுதி செய்யப்பட்ட காலத்தில் அவன் வாழ்ந்தானெனினும் அவன் பிறந்தது; சுவாசித்தது; வாழ்ந்தது; மறைந்தது அனைத்தும் அடிமை இந்தியாவில்தான் நாட்டு விடுதலையை எண்ணி, எண்ணி நைந்துருகி ஆவி துறந்தவர்கள் பட்டியலில் பெண்கள் இடம் பெறாமலில்லை.

இந்திய விடுதலை பற்றிச் சிந்தித்தவர்கள், சிந்தித்தவர்களுக்குத் துணையானவர்கள், விடுதலைப் போராட்டத்தில் நேரிடையாக ஈடு பட்டவர்களுக்குத் துணை நின்றவர்கள், ஊக்கு

www.tamilarangam.net

வித்தவர்கள், உடைமைகளைத் தந்தவர்கள், உயிரைப் பணயம் வைத்தவர்கள் பட்டியலில் பெண்களும் இடம் பெற்றுள்ளனர். இவற்றை யெல்லாம் மீறி விடுதலைப் போராட்டத்தில் நேரிடையாகப் பங்கு பெற்ற பெண்களும் உண்டு.

இந்திய நாட்டு விடுதலைப் போராட்ட வரலாறு நெடியது. நெஞ்சை நெகிழ்விக்க வைப் பது. நினைத்து, நினைத்துப் பெருமைப்பட வைப்பது. கண்ணீர் பெருக்க வல்லது.

விடுதலைப் போராட்டத்தில் முதல் குரல் எழுப்பிய தமிழகத்து வீரபாண்டிய கட்ட பொம்மனுக்கு அனைத்து வகையிலும் அவன் குடும்பத்தார், குறிப்பாக அவனது மனைவி துணையாக நின்றதை வரலாறு குறிப்பிடு கின்றது.

ஆங்கிலேயர்களால் அடிமைப்பட்டுக் கிடந்த பாரத சமுதாயத்தைப் பாரதத்தாய் அடிமைப்பட்டுக் கிடப்பதாகவே மக்கள் நினைத் தனர். இந்தியத்தாயின் கண்ணீரைத் துடைப்பது, அடிமை விலங்கொடிப்பது, அவளை மகிழ்ச்சி யாக வைத்துக் கொள்ளுவதென்ற எண்ணம்

www.tamilarangam.net

இந்தியர்களிடம் மேலோங்கியிருந்தது. நாட்டைப் பெண்ணாகக் கண்டு, நாட்டு விடுதலையையும், பெண் விடுதலையையும் பிரிக்க முடியாத அளவுக்கு விடுதலை இயக்கத்தை உருவாக்கினார்கள்.

## விடுதலைப் போரில் வீழ்ந்த முதல் மலர்கள்:

விடுதலைப் போராட்டத்தைச் சிப்பாய்க் கலகம்' என்று வருணித்த காலத்தில் சுதேசி மன்னர்கள் பலரும் அதில் ஈடுபட்டிருந்தனர். வடக்கும், தெற்கும், கிழக்கும் மேற்கும் ஒரே குரலெடுத்துப் போராடிக் கொண்டிருந்தது. இப்போராட்டத்தில் வாளேந்தி வீர வரிசை காட்டி உயிர் துறந்த ஜான்சி ராணி இலட்சுமி பாயை வரலாறு மறக்க முடியாது. படை வரிசைக்குத் தலைமை தாங்கி வாள் சுழற்றி எதிரிகளின் தலையினைப் பந்தாடிய காட்சியை வரலாறு வரைந்து காட்டுகிறது. ஜான்சிராணி வரிசையில் இராணி மங்கம்மாளும் இடம் பெறுகிறார். பாளையத் தலைவர்கள், குறு மன்னர்கள் விடுதலை வேள்வியில் தீக்குளிக்க முற்பட்ட பொழுது, அவர்களுக்குத் தடை

www.tamilarangam.net
யேதும் சொல்லாமல், நாட்டு மானத்தையே பெரிதாகக் கருதிப் போராட்டத்திற்கு ஆதரவு கொடுத்துப் பெண்ணரசியர் பலரும் வரலாறு படைத்துள்ளனர்.

## சுதந்திரத்தின் சூறாவளிக் காற்று - பெண்கள்

'சுதந்திரம் எங்கள் பிறப்புரிமை 'சுதந்திரம் அடைந்தே தீருவோம்' என்ற முடிவோடு சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டோருக்கு அனைத்து உதவிகளும் செய்தவர்கள் அவர்கள் வீட்டுப் பெண்களே என்பதை யாராலும் மறக்க முடியாது.

சுதந்திரக் கப்பலை தென்குமரிக்கடலில் ஓட்டுவதை இலட்சியமாகக் கொண்டிருந்த வ.உ.சிதம்பரனாருக்கு அவர் மனைவி செய் துள்ள உதவியை அளவிட்டுக்கூறமுடியுமா?

கப்பலை ஓட்டி, கடுங்காவலுக்காளாகி, உப்பில்லாக் கூழுண்டு உடல் மெலிந்த தென் னாட்டுத் திலகர் சிதம்பரனார் நெஞ்சு நிமிர்ந்து விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட

www.tamilarangam.net



ஜான்சி ராணி
இலட்சுமி பாய்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அனைத்துத் தியாகங்களையும் செய்தவர் அவரது மனைவியாவார். கோவை சிறையில் செக் கிழுத்தும், கடுநோய் கண்டும், கலங்கித் துடித்துத் தன் கணவனின் மன உறுதி குலைவுக் குக் காரணமாகிவிடாமல் கண்ணீரைக் கரந் தடக்கி கைகொடுத்தவர் அவரது மனைவி. வ. உ. சி அவர்களின் பெயர் வரலாற்றில் இடம் பெற்ற அளவுக்கு அவரது மனைவி பெயர் இடம் பெறவில்லையாயினும், அது பற்றிக் கவலைப் படாமல் கணவனது நாட்டுப் பணிக்கும், நாட்டு விடுதலைக்குமாகத் துணைநின்றார்.

நமக்குத் தொழில் நாட்டுக் குழைத்தல்' எனத் தெளிவாகத் திட்டவட்டமாகக் கூறிக் கொண்டு 'விடுதலை விடுதலை விடுதலை' எனப்பாடிச் 'சுதந்திர தேவி! நின்னைத் தொழு திடல் மறக்கிலேனே'எனத் தொழுது'வந்தே மாதரம்' எனக் கூறிச் சிறை சென்ற மகாகவி பாரதியின் வற்றாச் சுதந்திரச் சிந்தனைக்கு அவரது மனைவி இறுதிவரை துணை நின்றார்.

நாட்டுக் கொடியைக் காப்பது என்பது உயிரைக் காப்பதை விட மேலானது என்பதை நினைந்து உணர்ந்த திருப்பூர் குமரன் தாயும், துணைவியும் கொடுத்த ஊக்கத்தால் தான் கொடி

www.tamilarangam.net

காக்க குமரனால் உயிர் கொடுக்க முடிந்தது. திருப்பூர் குமரன் - கொடிக்காத்த குமர னாக மாறத் துணை நின்ற பெருமைக்குரியவர் அவர் மனைவியாவார்.

தென்னாப்பிரிக்காவில் காந்தியடிகள் போராட்டம் நடத்திக் கொண்டிருந்த காலம். தமிழ்நாட்டின் மாயவரத்திற்குப் பக்கத்தி லிருக்கும் சின்ன ஊர் தில்லையாடியிலிருந்து வாணிகம் செய்யும் பொருட்டுச் சென்ற வணிகக் குடும்பத்தைச் சார்ந்த பெண் வள்ளியம்மை. விடுதலைப் போராட்ட உணர்வைத் தந்தை, தாயிடமிருந்து உணர்வாலும், காந்தியடிகளிட மிருந்து உணர்வினாலும் பெற்றவள். காந்தியடி கட்கு எவ்வகையிலும் விடுதலைப் போராட் டத்தில் துணைநிற்க வேண்டுமென்ற வேட்கை மிகுந்தவர். தென்னாப்பிரிக்க அரசின் தடையை மீறி காந்தியடிகள் அன்றொரு நாள் ஊர்வல மாகப் புறப்படுகிறார். ஊர்வலத்தின் நோக்கம் - இந்திய விடுதலை, தென்னாப்பிரிக்காவில் வாழும் இந்தியர்கள் பலரும் கலந்து கொள்ளு கின்றனர். தென்னாப்பிரிக்க மக்களில் சிலரும் பங்கேற்கின்றனர். காந்தியடிகளின் இச் செயலை விரும்பாத அரசு அவரை ஒரு குறிப்பிட்ட

www.tamilarangam.net

இடத்தில் வைத்து, ஊர்வலமாக வரும்போது சுட்டுவிட முயற்சிக்கின்றனர். இச் செய்தியை எப்படியோ அறிந்து கொண்ட அவ்விளம்பெண் தில்லையாடி வள்ளியம்மை ஊர்வலத்தில் காந்தி யடிகளின் பக்கத்திலேயே போகிறார். விலை மதிப்பில்லாக் காந்தியடிகளை - அவர் பணியை நன்கு அறிந்தவள். தங்களுக்கு நல்வழி காட்டும் ஆசானைக் காப்பாற்றுவதே இலட்சியமாக நினைக்கின்றாள். திட்டமிட்டபடி, இடத்தில் காந்தியடிகளின் நெஞ்சுமீது குறிவைக்கப்பட்ட குண்டுகளைத் தன் நெஞ்சு மீது வாங்கிக் கொண்டு இரத்த வெள்ளத்தில் மிதந்து உயிர் துறக்கிறாள். சுதந்திரத் தலைவனைக் காப்பாற் றிய உயர் பெருமை தில்லையாடி வள்ளி யம்மைக்கு உண்டு. தில்லையாடி வள்ளியம்மை போலப் பல பெண்களைப் பலி கொடுத்துத்தான் விடுதலை பெற முடிந்தது.

சுத்தியின்றி இரத்தமின்றி விடுதலை பெற்றதாகக் கூறிக் கொள்ளுவதில் நமக்குப் பெருமையென்றாலும் இரத்தம், கண்ணீர் சிந்தா மல் நமக்கு விடுதலை கிடைக்கவில்லை என்பது தான் உண்மை.

விடுதலை வீரர்களான ராஜகுரு, சுகதேவ்,

www.tamilarangam.net

பகத்சிங்கை நாம் உயிர் உள்ளவரை மறக்க முடியாது. நாட்டு விடுதலை கேட்ட ஒரே பாவத்திற்காகத் தூக்குக் கயிற்றினை முத்தமிட்ட அவ்வீரர்களை ஆங்கில அரசு சித்ரவதை செய்ய நினைத்தது. தலைமறைவாகி வாழ்ந்து கொண்டிருந்த அந்த இளஞ்சிங்கங்களைப் பிடிக்க எத்தனையோ பரிசுகள் அறிவிக்கப்பட்டிருந்தன.

ஒரு நாள்! மங்கிய மாலைப் பொழுது. அந்த சின்னஞ்சிறிய கிராமத்துக்குப் பகத்சிங் வந்திருப்பதாக வெள்ளைப் பரங்கியனுக்குச் செய்தி கிடைக்கிறது. செய்தி தீயைப் போலப் பரவிவிட்டது. கிராமமே அச்சத்தில் மிதந்து கொண்டிருக்கிறது. அந்தச் சமயம் ஒற்றைக் கதவுள்ள அந்த ஓலை வேய்ந்த மண் குடிசையின் கதவு தட்டப்படுகிறது. கதவைத் திறக்கிறாள் வீட்டுத் தலைவி. உள்ளே பகத்சிங் வருகிறார். கதவைத் தாளிடக் கூட முடியவில்லை. நிலைமையை விளக்குகிறார். அதற்குள் வெளியில் ஆள் நடமாட்டம் மிகுதியாகக் கேட்கிறது. பேரிரைச்சல், பெருங்கூச்சல், பெருங்குழப்பம். தலைவிக்கு ஒரே குழப்பம். வீட்டுத் தலைமகன் திகைத்து நிற்கின்றான். குழப்பமும், திகைப்பும்

www.tamilarangam.net

ஒரு நிமிடம் தான். மள, மளவெனக் காரியங்கள் நடக்கின்றன. வார்த்தைகளால் அல்லாமல், வாயால் அல்லாமல், மௌனமாகத் தலைவனும், தலைவியும் ஜாடையாகப் பேசி ஒரு முடிவுக்கு வருகின்றார்கள். வீட்டுத்தலைமகன் வீட்டின் நடுவில் இருந்த கம்பத்தைச் சுட்டிக் காட்டி அதன் மீதே பகத்சிங்கை ஏறிக் கூரையைப் பிய்த்துக் கொண்டு வெளியில் குதித்துத் தப்பித்துக் கொள்ளுமாறு கூறுகிறான். அதற்குள் அந்த வீட்டுத் தலைவி ... என்ன செய்தாள்?

திருமணமாகிப் பத்தாண்டுகளுக்குப் பிறகு பத்துமாதம் மகனைச் சுமக்கும் வாய்ப்பு பெற்ற அந்த மாதரசியின் கையில் பத்து மாதக் குழந்தை. முந்தித் தவம் நோற்று, முந்நூறு நாள் சுமந்து, அந்திசந்திக் கண்விழித்துப் பெற்ற ஒரே வாரிசு-ஆண்மகன் - இனிக் குழந்தை பிறக்க வழியில்லாமல் தாயின் வயிற்றை அடைத்துவிட்டுப் பிறந்த பிள்ளை - பகத்சிங்கைப் பற்றி அறியாது-விடுதலைப் போராட்டத்தைப் பற்றிப் புரியாது. தாய்ப்பாலின் சுவையை மட்டுமே அறிந்த பிள்ளை- தொட்டிலில் தூங்கிக் கொண்டிருந்த

www.tamilarangam.net

வனைக் தூக்குகின்றாள். கணவன் மனைவி இரு வருமே தொழிலாளிகள். உழைக்கும் வர்க்கத் தைச் சேர்ந்தவர்கள். உரமேறிய தனது கரங்களால் குழந்தையின் இரண்டு கால்களைப் பிடித்துச் சுவற்றில் ஓங்கி அடிக்கவும் வீட்டுக் கதவு காவல்துறையினரால் உடைக்கப்படவும் - கூரை யைப் பிரித்துக் கொண்டு பகத்சிங் தப்பிக்க வுமான மூன்று நிகழ்ச்சிகளும் ஒரே காலத்தில் நடைபெறுகின்றன. தனது குழந்தையை ஆங்கிலக் காவலாளிகள் கொன்றுவிட்டதாக அழுது புலம்பி ஆர்ப்பரிக்கும் பெண்ணின் பக்கம் கூட்டம் முழுவதும் அனுதாப அலைகள் திரும்பி விடுகின்றன. காவலர்கள் திகைத்து நிற்கின்றனர். கூட்டம் முழுவதும் வருத்தப்படத் துவங்குகின்றது. பிள்ளையில்லாது அந்தக் கணவன்-மனைவி பட்ட வேதனைகள் - பிள்ளை பிறந்தது - பிள்ளைச் செலவுக்குக் கூடப் பண மில்லாது தவித்த அந்தப் பெற்றோரின் தவிப்பு - ஆங்கிலேய சிப்பாய்கள் ஈவிரக்கமில்லாது பிள்ளையைக் கொன்றுவிட்ட கொடுமை பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறது. மேலும் தாங்கள் அங்கு இருந்தால் உயிருக்கே ஆபத்து விளையு மென்று உணர்ந்த சிப்பாய்கள் பகத்சிங்கை மறந்து வேறு வழியாக வேறுபக்கம் செல்லுகின்

www.tamilarangam.net

றார்கள். இந்தச் சந்தடியில் எவர் கண்களிலும் படாமல் பகத்சிங் தப்பித்துப் போய் விடு கின்றார். ஓர் சுதந்திரப் போராட்ட வீரனைத் தப்பச் செய்வதற்காக 'வராது போல் வந்த மாமணியை', தன்னுயிரை, தன்னுயிர்க்குயிரான சின்னஞ்சிறு கிளியை, செல்வக் களஞ்சியத்தைத் தன் கைப்படக் கொன்ற அந்தத் தாயின் பெயர் கூடத் தெரியவில்லை. இப்படிப் பல தாய்மார் கள் தங்கள் பங்களிப்பை விடுதலைப் போராட் டத்திற்கெனச் செய்துள்ளனர்.

சுதந்திரப் போராட்ட வீரர்கள் பலர் தலை மறைவு வாழ்க்கை மேற்கொண்ட காலத்தில் வீட்டையும், உறவையும், மனைவி, மக்களை யும் மறந்து, துறந்து வாழ வேண்டிய சூழல் ஏற்பட்டது. அந்தக் காலங்களில் விசாரணை என்ற பெயரால் பெண்கள் பட்ட கொடுமை கள் எண்ணிலடங்காதது. ஒரு குறிப்பிட்ட கிராமத்தைச் சேர்ந்தவராக ஒரு விடுதலைப் போராட்ட வீரர் இருந்தால் அந்தக் கிரா மத்தையே குறிப்பாகக் கிராமத்துப் பெண்களைக் கொடுமைப்படுத்துவதில் அந்நியப் பரங்கியர் முனைந்து நின்றனர். அடிமைகளாக நடத்தின

www.tamilarangam.net
இச்சைக்குப் பணிய வைத்தனர். குழந்தைகள், முதியவர்களைக் கொடுமைப்படுத்தினர். விருப்பமில்லா உணவுப் பொருட்களை குறிப்பாக இறைச்சி உணவைச் சமைத்துப் போடச் செய்தனர். மனதாலும் உடலாலும் வேதனைப்பட்டு வீர சுதந்திரம் வேண்டிய பெண்கள் ஆயிரமாயிரம் எனலாம்.

கைராட்டினம் கொண்டு நூல் நூற்று. காந்தி பாட்டுப் பாடினார்களென்பதற்காகப் பல பெண்கள் கொடுமைப்படுத்தப்பட்டனர்.

'ஆடு ராட்டே' எனப் பாடி நூல் நூற்றுக் கதர் விற்பனையை ஊக்குவித்த பெண்கள் பலரின் நகக் கண்களில் ஊசி ஏற்றப்பட்டது. சிலரின் விரல்கள் கூடத் துண்டிக்கப்பட்டன. கொதிக்கின்ற தண்ணீரிலும், எண்ணையிலுமாக அவர்களது விரல்கள் முழ்கவைக்கப்பட்டன. எண்ணிறந்த வேதனைகளை வெளியில் உமிழ முடியாமல் நெஞ்சுக்குள்ளே வைத்து மறுகிய பெண்களும் உண்டு.

'கதர்க்கொடி கப்பல் தோன்றுதே' என்ற பாடலைப் பாடியதற்காக வாயில் சூடு வாங்கிக்

www.tamilarangam.net



அன்னி பெசன்ட் அம்மையார்

www.tamilarangam.net
கொண்ட பெண்கள் பலர் உண்டு. தடியடி வாங்கிய தாய்மார்களும் உண்டு.

## பெண்கள் இல்லாமல் விடுதலை இல்லை

விடுதலை இயக்கத்தின் 'சூறாவளிக் காற்று' பெண்கள் எனப் பாரதிக் கவிஞன் கூறுவான். காங்கிரசு மகாசபைக்குத் தலைமைதாங்கிய அன்னி பெசன்ட் அம்மையாரின் தீரட ம, வீரமும் என்றும் போற்றற்குரியது எனப் பலரும் கூறி மகிழ்ந்திருக்கிறார்கள். அன்னிபெசன்ட் அம்மை யாரின் தீர்க்கமான தெளிவுற்ற, அறிவு, முடி வெடுக்கும் ஆற்றல், உறுப்பினர்களை நடத்திய முறையைக் கண்டு மகிழ்ந்த பலரும் பெண் களின் விடுதலை வேட்கையை மதித்தார்கள். மதித்ததோடு மட்டுமல்லாமல் பெண்களின் பங்கேற்பு முழுமையாகக் கிடைத்துவிட்டால் விடுதலை பெறுவது மிக எளிதாகிவிடும்.

கவிக்குயில் சரோஜினி நாயுடுவின் அறிவாற்றல் மிகுந்த பங்களிப்பும், அவரது உணர்வு நிறைந்த கவிதைகளும் இந்திய

www.tamilarangam.net
விடுதலைக்கு மட்டுமன்றி ஏற்றத் தாழ்வு மிகுந்த நிலையை மாற்றிச் சமமான உரிமைகளை வழங்குமென எதிர்ப்பார்த்தனர்.

காந்தியடிகள் மேற்கொண்ட உப்புச் சத்தியாக்கிரகத்தில் ஆண்மக்கள் எவ்வளவு ஆர்வமுடன் ஈடுபட்டார்களோ அதைவிட மிகுந்த ஊக்கத்துடன் பெண்கள் ஈடுபட்டதை யும், சிறை சென்றதையும் வரலாறு மறக்க வில்லை.

'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தில் ஈடுபட்ட பெண்கள், இந்திய விடுதலைக்காகத் தீவிரவாதியாக மாறிய மாடம் காமாவை யாரும் மறக்கமுடியாது.

இந்திய விடுதலைப் போராட்டத்தின் முதுபெரும் தலைவியாகிய அருணா ஆசப் அலி தலைமறைவாக நீண்ட நாட்கள் இருந்த பெண் களில் முதன்மை பெறுகிறார். இவரைப் பற்றிய தகவல் தெரிவிப்பவர்களுக்கு ஐயாயிரமும், அதற்கு மேலும் ரொக்கப் பரிசு தரப்படும் என அரசாங்கம் அறிவிக்குமளவிற்கு விடுதலைப்

www.tamilarangam.net
போராட்டத்தில் ஈடுபட்ட முதல் பெண்மணி. 'இன்குலாப்' பத்திரிக்கையின் ஆசிரியராக இருந்து எழுத்தின் மூலமாகவும் ஆங்கிலேயரைக் கதிகலங்க வைத்துக் கொண்டிருந்தவர்.

'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தில் ஆர்ப்பாட்டம் நடத்தி வெள்ளையனின் குண்டுக்குப் பலியான மாதங்கினி ஹஸ்ராவை யாரும் மறந்துவிட முடியாது.

தமிழகத்தில் வாஞ்சிநாதன் போன்ற வீர இளைஞர்கள் ஆங்கில அதிகாரிகளைச் சுட்டுக் கொல்ல முயன்றது போல வங்காள ஆங்கிலேய கவர்னர் ஸ்டான்லி ஜாக்சனைச் சுட்டுக் கொல்ல முயன்ற வீணாதாஸ் ஆயுள் தண்டனை பெற்றவர்.

விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு சிறை சென்ற முதல் பெண்மணி என்ற சிறப்புப் பெறுகின்றவர் ருக்மணி லட்சுமிபதி. தென்னகத்தில் சர்தார் வேதரத்னம் பிள்ளை அவர்களுடன் உப்பு சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டு ஓராண்டு சிறைத் தண்டனையை ஏற்று வேலூர் சிறையில் இருந்தவர். சிறையில் பெண் கைதிகள் பிரிவு

www.tamilarangam.net



www.tamilarangam.net

என்பது இவரை வைத்துத்தான் துவக்கப் பட்டது. இது போன்று சுட்டிக் காட்டப்பட வேண்டிய பெண்கள் அநேகர் இருக்கின் றார்கள்.

விடுதலைப் போராட்ட வேள்வியில் திருப்புமுனையை ஏற்படுத்தி, விடுதலை பெற்றே தீருவோமென்பதில் எண்ணிறந்த தியாகத் தழும்புகளையேற்ற அண்ணல் காந்தி யடிகளுக்குப் பின்புலமாக, பக்கபலமாக விளங் கியவர் அவரது அன்னையார் புத்திலி பாய். சத்தியத்தையும் நேர்மையினையும் சொல்லிக் கொடுத்தவர். அகிம்சைக் கொள்கைக்கு வித்திட் டவர். அவரின் வளர்ப்பாக, வார்ப்படமாகக் காந்தியடிகள் விளங்கினார். காந்தியடிகள் வீட்டில் உதவிக்காக இருந்த கிழவி ரம்பாவின் சத்தியதாக்கம் தன்னை எப்படி நிமிர்ந்து நிற்க வைத்தது என்பதை அவரே கூறுவார். ரம்பா கிழவி எனக்கு ஒரு ஆசிரியையாக இருந்து நல்லன பலவற்றைச் சொல்லித் தருவாளென நான் கனவிலும் கருதவில்லை. அவளால் நான் உலகத்தைக் கற்றுக் கொள்ள முடிந்தது. இராமன், இரகீம் இருவரும் உணர்வால் ஒரு வரே என்பதை மிக எளிமையாகச் சொல்லிக்

www.tamilarangam.net
கொடுத்தவர் ரம்பா கிழவிதான். மதவாத அடிப்படையில் நாடு பிரிவதை ஏற்க முடியாது; நான் துன்பப்பட்டதற்குக் காரணம் அவளின் போதனைதான் காரணம் என எழுதுவார்.

காந்தியடிகளுக்கு அருமைத் துணைவியாக வாய்த்த கஸ்தூரிபாய் காந்தி, காந்தியடிகளின் நாட்டு விடுதலைப் போராட்டத்திற்கு உதவி யவற்றை விரிக்கின் விரிந்து கொண்டே போகும். காந்தியடிகளிடம் இருந்த பிடிவாதம், சகிப்புத் தன்மை, விட்டுக் கொடுக்கும் போக்கு, அகிம்சை புற்றிய சிந்தனை மேலும் ஆழமாவதற்குக் கஸ்தூரிபாயே மிக அதிகமாக உதவி இருப்ப தாகக் காந்தியடிகளே குறிப்பிட்டுக் கூறுவார். பெருந்தலைவர்கள் உள்ளிட்ட பெரியவர்களின் உணர்வுகள் சரியான வகையில் வெளிப்பட, பெண்களே காரணமாக இருந்திருக்கின்றார்கள். நன்மை காண, தீமை விலக, ஒற்றுமை ஓங்க அடிமை ஒழிய, பெண்கள் கைகாட்டிய பக்கம் ஆண்கள் பாதுகாப்பாக இருந்ததாக வரலாறு குறிப்பிடுகின்றது.

இந்தியாவின் ஈடு இணையற்ற பிரதம

www.tamilarangam.net

ராக விளங்கிய நேருவின் வாழ்க்கைத் துணைவியார் கமலா நேரு ஆரவாரமில்லாமல் செய்த பணியை யாராலும் மறக்க முடியாது. குடும்ப வாழ்க்கை, சமூக வாழ்க்கை, அரசியல் போராட்டம் அனைத்தையும் காந்தியடிகள் வழியில் சோதனைக்களமாக்கிய பண்டித நேருவுக்குக் காரியம் யாவினும் கைகொடுத்தவர் கமலா நேரு. அதனால்தான் அடுப்படியிலும் பிள்ளைப் பேற்று அறையிலும் அடிமை போல முடங்கிக் கிடந்த பெண்குலத்துப் பொன் விளக்கை - போராட்ட ஜோதியை - இந்திரா காந்தியை, கமலா நேருவால் கொடுக்க முடிந்தது. தியாகம், தேசநலன் இரண்டும் கைவீசி கைவீசி காலாற நடந்து இந்த நாட்டின் தலைமைப் பொறுப்பை ஏற்றார். விடுதலைக்குப் பின்னும் இன்றைய பெண்கள் மீண்டும் நாட்டு விடுதலைக்குப் போராட வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப் பட வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது.

'ஒருபானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்ற பழமொழிக்கேற்ப விடுதலைப் போராட்டத்தில் பெண்களின் பங்களிப்பு மகத்தானதாக இருக்கிறது.

www.tamilarangam.net

'விலகி ஓர் பொந்தில் வாழ்வதை வீர மங்கையர் விரைவில் தடுப்பாராம்' என்ற பாரதி கூற்று இன்று நனவாகி வருகிறது. என்றாலும் பல்வேறு விடுதலைக்காகப் போராட வேண்டிய சூழ்நிலையில் உள்ள பெண்கள் நாட்டு விடு தலைக்குத் தங்களை ஈடுகொடுத்துப் பெண்கள் வழியில் நல்ல பாரதம் காண சுய நினைவோடு முயல வேண்டும். 'எடுப்பார் கைப்பிள்ளை யாக', சொல்லிக் கொடுத்ததை அப்படியே திரும்பக் கூறும் நொண்டிக் கிளியாகிவிடாமல், தின்றதைத் தின்று தெவிட்டும் கருத்துக்களைக் கூறாமல், அரைத்த மாவையே திரும்பத் திரும்ப அரைத்துச் சுவை குன்றிப்போகும் பொம்மை வாழ்வு வாழாமல் உயிரோட்டம் நிறைந்த அன்பு, தியாக வாழ்வுக்குப் பெண்கள் மீண்டும் தங்களை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும்.

நாடு பெரிது. நாட்டின் வாழ்வு பெரிது. நாட்டின் மானம் பெரிது. நாடு வாழ நாம் வாழ்வோம். சாதி, மத, இன, சமய பேதம் நீங்கிய சன்மார்க்கம் காணும் விடுதலையை விரைவில் அமைப்போம். விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட பெண்கள் பெற்றிருந்த மன உறுதியை

www.tamilarangam.net

விடத் தெளிவான உறுதிபெறுவோம். அந்நியரை எதிர்ப்பது எளிது. நம்மை நாமே எதிர்ப்பது என்பது அவ்வளவு எளிதல்ல. கலாச்சார, பண்பாட்டுச் சீரழிவு ஏற்படாத ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்கப் பெண்கள் அனைவரும் ஒரு பேரியக்கமாக மாறிச் செயல்படுவதுதான் மிக முக்கியப் பணியாகும்.

'ஒன்று படுவோம்! போராடுவோம்!
வெற்றி பெறுவோம்'

இதுவே நமது தாரக மந்திரமாக ஒலிக்கட்டும்.

★★★

www.tamilarangam.net

# பெண்ணுரிமை

'எல்லார்க்கும் தேசம் எல்லார்க்கும்
உடைமையெலாம்
எல்லார்க்கும் எல்லா உரிமைகளும்
ஆகுகவே'

என்பார் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்.

'எல்லாருக்கும் எல்லா உரிமைகள்' என்ற கூற்றில் பெண்ணுரிமையும் அடங்கிவிட்டது. இது தான் உண்மை. பெண்ணுரிமை பற்றித் தனியாகச் சிந்திக்க வேண்டுமா? எழுத வேண்டுமா? படிக்கவேண்டுமா? பேசவேண்டுமா? சட்டமியற்ற வேண்டுமா? இது போன்ற கேள்விகள் இந்த நூற்றாண்டிலும் எழுப்பப்படுவதும் உண்மைதான். எனவேதான் பெண்ணுரிமை பற்றித் தனியாகச் சிந்திக்கவும், சமுதாயத்திற்கு எடுத்துக் காட்டவும் வேண்டியுள்ளது.

ஆணும் பெண்ணும் இயற்கையின்

www.tamilarangam.net

இரண்டு கூறுகள். ஒன்று, மற்றொன்றை நிறைவு செய்கிறது. அரவணைக்கிறது. இணைந்து செயல்படுகிறது. இவற்றில் ஒன்றை விட்டு விட்டு மற்றொன்றைப் பற்றிச் சிந்திக்கவே முடியாது. இரண்டையும் தனியாகப் பிரிக்க முடியாது. தனியாகப் பிரிக்க முயன்றால் உலகமே கிடையாது. உலகத்தில் முதலில் ஒரே ஆணும், ஒரே பெண்ணும் தோன்றியதாக வரலாறு கூறுகிறது. 'அம்மை, அப்பா' எனச் சிந்தை வியந்து வணங்கிப் போற்றினர். ஆண்களுக்கு இலட்சியம் வீரம், அந்த வீரத்தைச் சுமந்து வெளிக்காட்ட வைத்தவர்கள் பெண்கள். ஆக, ஆணும் பெண்ணும் ஒத்த உரிமை பெற்றவர் களாகவே பழைய காலத்தில், வாழ்ந்திருந்த தாகச் சான்றுகள் எடுத்துக்காட்டப்படுகின்றன. வரலாற்றிலே ஏற்பட்ட ஏற்றத் தாழ்வு, சமத்துவமின்மை, பொருளாதாரச்சிக்கல், அடிமைப்படுத்தவேண்டுமென்ற ஆதிக்க மனப் போக்கு மனிதவாழ்வில் உரிமை பற்றிச் சிந்திக்க வைத்தது. இந்தப் போராட்டச் சிந்தனைக் களத்தில் அதிகமாகப் பாதிக்கப்பட்ட பெண்கள் தங்களது உரிமை பற்றி எண்ணத் தொடங்கினர்.

www.tamilarangam.net

## உரிமை என்றால் என்ன?

உரிமை என்பது உயிர்ப்பிறப்போடு உடன் பிறப்பது. உரிமை என்பது விலைக்கு வாங்கப் படுவது அல்ல. ஒருவர் கொடுப்பதுமில்லை. மற்றவர் வாங்குவதும் இல்லை. எந்தக் கட்டுப் பாடுகளுக்கும் அடிமையாகாது தானே சிந்தித்து, தன் உணர்வுகளைத் தானே மதித்து மற்றவர் களும் மதிக்க வாழ்வதுதான் உரிமையாகும். உரிமையை யாருக்காகவும், எதற்காகவும் விட்டுக் கொடுக்கக்கூடாது. சரிசமமாக நடத்தப் படும் முறைதான் உரிமையாகும்.

## பெண்ணுரிமை பற்றிய இருவேறு கருத்துக்கள்

தமிழ்நாட்டு வரலாறு பெண்களுக்கு பெருமை தரும் வரலாறாகவே விளங்குகிறது. அறிவுலகம் பெண்களுக்குச்சிறப்பும், உரிமை யும் வழங்கத் தவறவில்லை. ஒரு சமுதாயம் சீரும், சிறப்புடனும் உயர்ந்த குறிக்கோளுடனும் வாழ ஆணும்பெண்ணும் ஒரே நிறையில் வைத்துப் போற்றப்படவேண்டும். மனித உரிமைகள் அனைத்தும் பெண்களுக்கும் உட்பட்டதே.

www.tamilarangam.net

பெண்ணுரிமை பற்றி இரண்டுவிதக் கருத்துக்கள் இன்றும் நிலவி வருகிறது. 'பெண்மை வாழ்க! பெண்மை உயர்க! பெண்மை வெல்க!' எனக்கூறும் இச்சமுதாயம் பெண்களுக்கான உரிமைகளை வழங்க எந்தக் காலத்திலும் தயங்கியதில்லை. பிறந்த பொன் நாட்டையே 'தாய்நாடு' எனக் கூறி பெருமைப் படுத்தியது. பேசும் மொழியைத் 'தாய்மொழி' என்றது. நாட்டில் நீர் பெருகி ஓடுகின்ற ஆறு களுக்கெல்லாம் பொன்னி, காவிரி, நர்மதா, கிருஷ்ணா, கோதாவரி போன்ற பெண்களின் பெயர்களால் அழைத்து மகிழ்ந்தது. மலைகளை மடந்தையாகப் பார்த்தது. பாடுகின்ற பாடல்கள் கூடக் கல்யாணி, வசந்தா, சகானா, சண்முக ப்ரியா போன்ற பெண் பெயர் கொண்ட இராகங்களால் பெருமைப்படுத்தப்பட்டன. கல்வியைக் 'கலைமகள்' என்ற பெயராலும், செல்வத்தைத் ' திருமகள்' என்றும், வீரத்தைக் 'கொற்றவை' என்றும் அழைத்து உயர்வு செய் தார்கள். 'பழையோள் குழவி' என்றது திரு முருகாற்றுப்படை. 'பழையோள்' என்பதும் கொற்றவையைத்தான் குறிக்கிறது. தாய்தான் 'கொற்றவை' அதாவது வீரமாகிறாள். பெண் தான் முதல் தெய்வமும் ஆகிறாள். 'தாயம்' என்ற சொத்துரிமை பற்றிய சொல் 'தாய்' என்ற

www.tamilarangam.net

சொல்லிலிருந்து தான் வந்தது. ‘ தாயிற் சிறந்த தொரு கோயிலுமில்லை’ என்ற வாக்கைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். தாய் வணக்கம், சக்தி வணக்கம் ஏற்பட்டது. இந்த வணக்கத்தின் அடிப்படையில்தான் சாக்தமதம் ஏற்பட்டது. தாயக்கடவுளின் வீரத்திற்கும், அன்புக்கும், காக்கும் சக்திக்கும் அனைவரும் தலைவணங் கினர். இவ்வகையில் மனித உரிமைகளுக்கெல் லாம் தலைமை ஏற்று நடத்தியவளாகப் பெண் கருதப்பட்டாள். இப்படி ஒரு கருத்து நிலவ, வேறுவிதமான எண்ணமும் தோன்றி நிலவாமல் இல்லை.

பெண்களுக்கு எந்தக்காலத்திலும் ஆண் களைப் போன்ற சமஉரிமை இருந்ததில்லை. பெண்களின் மெலிவான உடலமைப்பு, இயல் பான இரக்க குணம், விட்டுக்கொடுக்கும் போக்கு, பயந்த நிலை இதற்குக் காரணமாக இருந்துள்ளது. ஆண்களின் பராமரிப்பில், பாது காப்பில், நிழலில் பெண்கள் வாழ்ந்து வந்தனர். எனவே தான் பெண்ணுரிமை பற்றிய பேச்சே பிற்காலத்தில் எழுந்தது எனக் கூறுவோரும் உண்டு.

www.tamilarangam.net



ஆண்-பெண் சமத்துவமே
இந்தியாவின் முன்னேற்றம்

www.tamilarangam.net

'கல்வியில்லை உரிமையில்லை
பெண்களுக்கு
கடைத்தேற வழியின்றி விழிக்கின்றார்கள்'

என்ற புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் கூற்று நம்மை ஆழ்ந்து சிந்திக்க வைக்கின்றது.

## உரிமை மறுக்கப்பட்டது ஏன்?

நாட்டில் ஏற்படுகின்ற ஆட்சி மாற்றம், பொருளாதார ஏற்றத் தாழ்வு, தான்தான் உயர்ந் தவன் என்ற தனிமனித ஆதிக்கப்போக்கு, தன்னை விட மற்றவர்கள் தாழ்ந்தவர்களென்ற தரங்கெட்ட எண்ணம், வாழ்வின் சிறப்பையும், உயர்வையும் உணர்ந்து கொள்ளாதது, இறை வனின் படைப்பின்முன் உயிர்களெல்லாம் சமமானவை என்பதை உணராத போக்கு, பெண் களுக்கு இயல்பாகவே அமைந்துள்ள அமைதிப் போக்கைத் தங்களுக்குச் சாதகமாக எடுத்துக் கொள்ளுவது போன்ற காரணங்களால் பெண்க ளுக்கான உரிமைகள் மறுக்கப்பட்டதான நிலை ஏற்பட்டுள்ளது.

## பெண்களுக்கான உரிமைகள் யாவை?

மனிதனுக்கென்று தீர்மானிக்கப்பட்டுள்ள

www.tamilarangam.net

உரிமைகள் எல்லாம் பெண்களுக்கெல்லாம் உரியதுதான். தனிமனித முன்னேற்றம், சமுதாய முன்னேற்றம், ஊர்முன்னேற்றம், நாடு முன்னேற்றம், உலக முன்னேற்றத்திற்கான சிந்தனை, செயல்பாட்டுக்குரிய உரிமைகள் அனைத்தும் பெண்களுக்கும் உண்டு. குடும்ப, சமூக உரிமைகள் ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவானதே என நினைக்கவேண்டும். பெண்கள் மறுக்கப்படும் உரிமைகளால் பெண்கள் மட்டுமே பாதிக்கப்படுவதில்லை. ஆண்களையும் பெரிதும் பாதிக்கிறது. இந்தப் பாதிப்பில் வாழையடி வாழையாக உருவாகும் சமூகமே அடிமை எண்ணங்கொண்டு வளருகிறது. ஒருவரை மற்றொருவர் ஆட்டிப்படைக்க வேண்டும். அடிமையாக நடத்தவேண்டும். உழைப்பை மட்டும் வாங்கிக்கொண்டே இருக்க வேண்டும். தனக்குப் பின்னால் மட்டும் நிற்க வேண்டும். நடக்க வேண்டும். எதிர்த்துப் பேசக் கூடாது போன்ற எண்ணங்கள் மாற வேண்டும். பெண்களுக்குப் **பிறப்புரிமை, சிந்தனை உரிமை, வளர்உரிமை, பேச்சுரிமை, கல்வி உரிமை, வாக்குரிமை, மணஉரிமை, தொழில் உரிமை, சொத்துரிமை, அரசுரிமை ஆக அனைத்தும் இருக்க வேண்டும்.**

www.tamilarangam.net

'பெண்ணுக்குப் பேச்சுரிமை வேண்டாம் என்கின்றீரோ?' எனப் பாரதிதாசன் எழுப்பும் வினா நம்மை ஆழமாகச் சிந்திக்கத் தூண்டு கிறது.

## பிறப்புரிமை

குழந்தை பிறப்பென்பது மகிழ்வுக்குரிய நிகழ்ச்சியாகக் காலங்காலமாக நம் நாட்டில் கருதப்பட்டு வருகிறது. சூரப்பிள்ளைகளைப் பெற்றுத் தரும் இயந்திரமாகப் பெண்களைப் பார்க்கும் பார்வை இன்று அதிகமாக விரிந்து காணப்படுகிறது. ஒரு பெண் பெறுகின்ற குழந்தை ஆண் குழந்தையாக இருக்கவேண்டும். அது பெண் குழந்தையென்றால் கருவிலேயே அக்குழந்தைக்குக் கல்லறை கட்டப்பட வேண்டும். கட்டுப்பாட்டையும் மீறிப் பெண் பிறந்து விட்டால் அவர்களுக்குத் தாய்ப்பால் தராது கள்ளிப்பால் தந்து கொன்றுவிட வேண் டும். மணிச்சோறு தர வாய்ப்பில்லாமல் நெல் மணியைத் தொண்டைக் குழியில் போட்டுச் சாகடிக்க வேண்டும். குப்பைத் தொட்டியில் வீசி விடலாம். கழுத்தை நெரித்துக் கொன்று விடலாம், என்பது போன்ற முறைகள் இந்த

www.tamilarangam.net



தாய்ப்பால் கொடுத்து
ஆளாக்க வேண்டிய பெண் குழந்தையை
கள்ளிப்பாலுக்குப் பலி கொடுப்பதா ?

www.tamilarangam.net
நூற்றாண்டிலும் தலைவிரித்து ஆடாமல் இல்லை. இந்தப் போக்கிற்கு வருத்தப்படு வதைத் தவிர்த்து கண்டனக் குரலெடுத்து மேடை யில் முழங்குவதை நிறுத்தி - இரக்கப்பட்டு எழுதுவதை விடுத்து,

''மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல
மாதவம்
செய்திட வேண்டுமம்மா' என்ற கவிமணி

யின் கூற்றை மெய்யாக்கசெயல்படவேண்டும். 'பிறப்புரிமை' என்பது பெண்களின் பொது உரிமை என்ற குரலை அழுத்தமாக ஒலிக்க வேண்டும்.

## சிந்தனை உரிமை

' சிந்திக்கும் ஆற்றல் மனித இனத்திற்குப் பொதுவானது' என்பார் தேசப்பிதா அண்ணல் காந்தியடிகள். சிந்தனை வளத்தில் பெண்கள் பெற்றுவரும் மகத்தானவெற்றிகளைஅன்றாடம் நம் வீடுகளில் காணலாம். படிப்பறிவோடு சேர்ந்த பட்டறிவு, பட்டறிவோடு சேர்ந்த அன்புச் சிந்தனை கொண்ட பெற்ற தாயினால் அறிவறிந்த மக்கட்பேறு ஆற்றல் நிறைந்து இச்சமுதாய விழிப்புணர்வுக்கு ஆனந்தக்கும்மி

www.tamilarangam.net

கொட்டி வருகிறதென்பது உண்மையாகும். பெண்கள் சிந்தித்துச் செயல்படும்போது மனிதநேயம் தலைதூக்கி வளருகிறது. குழப் பங்கள் குறைகின்றன. மாறுபட்ட வாதங்கள் ஒடுங்குகின்றன.ஒன்றுபட்ட சிந்தனைகள் ஓங்கு கின்றன. ஈகை, ஒப்புரவு, இரக்கம், அமைதி போன்ற ஊற்றுக்கள் வளருவதற்குப் பெண் ணுக்குச் சிந்தனை உரிமை வேண்டும். 'பெண் புத்தி பின்புத்தி' எனக் குறை கூறக்கூடாது. வயிற்றிலும், நெஞ்சிலும், இடுப்பிலும் பெண் தனது குழந்தையை சுமக்கும் பொழுதே சிந்தனை வளத்தை ஊட்டுவதை யாராலும் மறுக்க முடியுமா?தாத்தா,அத்தை,மாமா அப்பா எனக் குழந்தைக்குச் சொல்லிக் கொடுத்து உறவுச் சிந்தனையை வளர்க்கும் பெண்ணுக்கும் பெண் ணுக்குச் சிந்தனை உரிமை மிக அவசியம்.

## வளர் உரிமை

பெண் குழந்தையின் உடல், உள்ள வளர்ச்சிக்கேற்ற உணவுப்பழக்க வழக்க முறை கள் தற்காலத்தில் பல இடங்களில் மறுக்கப் பட்டு வருகின்றன. பெண்ணின் மூளை வளர்ச்சி, சிந்தனை ஆற்றல், உழைக்கும் திறன்

www.tamilarangam.net

பற்றியெல்லாம் எண்ணிப்பார்த்து சத்தான உணவு தரும் வழக்கம் குறைந்து வருகிறது. ஆண்பிள்ளைக்கு இணையான வளர்ச்சிபெண் குழந்தையும் பெறவேண்டும். ஒத்த திறன், அறிவு, ஆற்றல், குணம், உழைப்பு நிறைந்த ஒருபெண் ஒரு ஆண்மகனுக்கு வாழ்க்கைத் துணையாக அமைய வேண்டுமென்றால் சம விகிதச் சீருணவு (Balanced diet) இருவருக்குமான வளர்ச்சிக்கு முக்கியம். வளர்உரிமை பெண் களுக்கு வளமாக் வழங்கவேண்டும்.

## பேச்சுரிமை

மனிதன் தன்னை மற்ற இனங்களிலிருந்து வேறுபடுத்திக் காட்டுவதற்குப் பல வழிகள் இருந்தாலும் அவனுக்குச் சிறப்பாக அமைந் துள்ள பேச்சுரிமை அவனை உயர்பிறவியாகக் காட்டுகிறது. இயற்கை பெண்களுக்கு இயற்கை யாகவே தந்துள்ள பேச்சுரிமைக்கு யாரும் தடை விதிக்கக்கூடாது. தன் நாவை அசைத்துத் தாலாட்டுப்பாடிக் குழந்தையை வளர்க்கப் பெண் பேசவேண்டி உள்ளது. சாப்பாட்டின் முன் அமர்ந்துள்ள கணவனுக்கு அவனது விருப்பப் படி சோறுபோட்டு, நலம்பேண, நன்கு

www.tamilarangam.net

உழைக்க, பெருமையோடு நடக்க 'இன்னும் கொஞ்சம் சாப்பிடுங்கள்' எனப் பேசவேண்டி இருக்கிறது. கால நிலை உணர்ந்து அறிவு மிகுந்து, குழப்பம் இல்லாமல், கவலை ஏற்படாத வாழ்வு அமையப் பெண் பேச வேண்டியிருக்கிறது. நாநலம் காப்பது நமக்கும், நாட்டுக்கும், நலம் பயக்குமென எண்ணும் பெண்ணைப் பேசவேண்டாமென்று கூறுவது தவறு. 'வாய்ப்பூட்டுப் பெண்ணுக்குப் போடுவோர் தங்கள் நலவாழ்வுக்குத் தாங்களே பூட்டுப்போட்டுக் கொள்ளுகிறார்கள்' என்ற பாரதியின் வசன உரைகளைப் பல முறை படிக்கவேண்டும். அளவாகப் பேசி, வளமான வாழ்வுக்கு இதமாக வழிவகுக்கும் பெண்களுக்குப் பேச்சுரிமை அவசியம் வேண்டும்.

## கல்வி உரிமை

சமுதாயத்தில் பெண்கள் தங்கள் நிலை உயரவேண்டுமானால் அவசியம் கல்வி கற்க வேண்டும். 'ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமை' என்பது மாறியே ஆகவேண்டும். 'அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு?' என்ற கேள்வியுடன் தொடங்கிய இந்த நூற்றாண்டும்

www.tamilarangam.net

முடியப் போகிறது. பெண்கள் கல்வி கற்கும் எண்ணிக்கை இன்று பெருகி உள்ளது. பள்ளிக்கு ஓடும் பெண்கள் தொகை வளர்ந்துள்ளது. கடந்த பதினைந்து வருட காலகட்டத்துக்குள் பெண்கள் கல்வி கற்கும் தொகை பெருகியுள்ளது என்ப தனைப் புள்ளியியல் கணக்கெடுப்புக் கூறுகின் றது. 7.1 விழுக்காடு மருத்துவர்கள் 15.6 விழுக்காடு பொறியாளர்கள், 10.9 விழுக்காடு அறிவியல் அறிஞர்கள், 1.2 விழுக்காடு வழக் கறிஞர்கள், ஆண்டுக்காண்டு பெருகிவரும் ஆசிரியைகள் என்ற விவரம் பெண்கல்வி வளர்ச்சியை எடுத்துக் காட்டுகிறது.

பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழகங்களில் கல்விகற்கும் பெண்கள் தொகை அதிகமாக இருப்பதோடு ஆய்வுத்துறை, நீதித்துறை, நிர்வாகத்துறை, காவல்துறைத் தேர்வுகளிலும் பெண்கள் அதிகமாகக் கல்விகற்று, கற்ற கல்விச் சிறப்பை நாட்டுக்கு உடைமையாக்கி வருகின் றார்கள்.

கல்வியில்லாப் பெண்கள் களர்நிலம்' எனப் பாவேந்தர் கூறியதை உணர்ந்தாற்போல

www.tamilarangam.net



www.tamilarangam.net

இப்பாரத நிலம் பெண்கல்வியில் ஓரளவு இன்று உயர்ந்து வருகிறது.

ஒரு பெண் கல்வி உரிமை பெறும் பொழுது எத்தனையோ நலன்களைப் பெருக்கி கொள்ளு கின்றாள். கல்வி அமுதத்தை வாயார உண்ட பெண் அடுக்களையிலே பாடத்தை ஆரம்பிக் கிறாள். பாடம் சொல்லும் ஆசிரியையாக மாறிக் குடும்ப நலம் பேணுகின்றாள். காலநிலை உணர்ந்து வாழக் கல்வி அறிவு வேண்டும். மாறி வரும் உலகத்தில் அறிவின் பயன் மிகுந்து வெறித்தனம் குறைந்து, ஆற்றல் பெருக பெண் களுக்குக் கல்வி உரிமை வேண்டும். நாட்டில் உள்ள அனைத்துப் பெண்களும் கல்வி கற்றுத் தங்களை உயர்த்திக்கொள்ள வேண்டும். கல்வி தான் உண்மையான அழகு. கல்வி மட்டுமே பெருமை சேர்க்கும்.

## வாக்குரிமை

மக்களாட்சி காலத்தில் வாழ்ந்து கொண் டிருக்கும் நமக்கு வாக்குரிமை பற்றி அதிகமாகச் சொல்லத் தேவையில்லை. பெண்களின் வாக் குரிமையை எதிர்பார்த்து வெற்றி பெறும்

www.tamilarangam.net

நிலைக்கு வாக்காளர் பலர் தள்ளப்பட்டுள்ளனர். பொன்னுக்கோ, பொருளுக்கோ, வேறு எதற்கோ அடிமையாகாமல் பெண்கள் தங்களது வாக்குரிமையைச் சிறப்பாகப் பயன்படுத்த வேண்டும். வாக்களிக்கும் உரிமையில் யாருடைய தலையீடும் தங்கட்குத் தேவையில்லை என்று சொல்லுமளவிற்குப் பெண்களது வாக்குரிமை நலம் அமைதல் அவசியம்.

## மண உரிமை

திருமணம் என்பது பெண் சார்ந்தது மட்டுமல்ல. ஆண் - பெண் இருவருக்குமே சொந்தமானது. இதனை உணர்ந்து திருமணத்தால் பெண்ணுக்குக் காலங்காலமாக இழைக்கப்பட்டு வரும் அநீதிகள் நிறுத்தப்படவேண்டும். வீடு தான் ஒரு பெண்ணின் இயங்குதளம். அவள் ஒரு குடும்ப விளக்கு. கல்வியும், திறமையும், சமூக அக்கறையும் கொண்டவர்களாகக் கணவனுக்குப் பின்னிருந்து அவனது வெற்றிகளுக்கு உறு துணையாக இருக்கவேண்டும். இப்படிப்பட்ட பெண் திருமணத்தில் ஈடுபட நல்ல விலை அதாவது வரதட்சணை கொடுக்கவேண்டும் என்ற கொடுமை எப்படியாவது நிறுத்தப்பட

www.tamilarangam.net

வேண்டும். மாமியார் கொடுமையிலிருந்து விலக்களிக்கப்பட்ட ஒரு சமுதாயம் பெண்களுக்கு உருவாக வேண்டும். குழந்தை மணம், இருதார மணம் மண்மூடிப்போகவேண்டும். வாழ்விழந்த விதவைப் பெண்கள் விரும்பினால் மறுமணம் செய்துகொள்ள அனுமதிக்கலாம். திருமணம் எனும் பெயரால் பெண்களுக்கு இழைக்கப்படும் தேவையற்ற கட்டுப்பாடுகள், கொடுமைகள், சட்டதிட்டங்கள் நல்ல இடமான, நலமான சூழ்நிலையைத் தராது என்பதை எடுத்துச் சொல்ல வேண்டும். மனைமாட்சியின் மறுபெயர்தான் திருமணமே தவிர வியாபாரமல்ல. இலாபநோக்குடன் நடத்தப்படும் சொந்தசந்தை வியாபாரமல்ல திருமணம். தான் விரும்பியவனைக் கைபிடிக்கும் உரிமையும் பெண்கள் பெறவேண்டும்.

## தொழில் உரிமை

கல்வி, கேள்விகளில் சிறந்த பெண்கள் அனைவரும் கிராமம், நகரம் என்று பாராமல் தொழில்புரியத் தொடங்கிவிட்டனர். ஆண்களும், பெண்களுமாகக் கூடித் தொழில் செய்யும் உரிமையும் இன்று பெருகிவருகிறது.

www.tamilarangam.net

ஆண் உயர்வென்பதும் பெண்
உயர்வென்பதும்
நீணிலத் தெங்கணும் இல்லை
வாணிகம் செய்யலாம் பெண்கள் - நல்
வானூர்தி ஓட்டலாம் பெண்கள்

என்ற பாரதிதாசன் பாடல் இங்கு நினைவுக்கு வருகிறது.

இன்றைய சூழலில் பெண் பெற்றிருக்கக் கூடிய விழிப்புணர்வு குறிப்பிடத்தக்கதாகும். கல்வியாலும் சூழ்நிலையாலும், பொருளாதார ஏற்றத்தாழ்வினாலும், சமுதாயத் தேவைகளாலும், தன் குடும்பத்தின் நேரடி அனுபவத்தினாலும், பெற்றோர், உறவினர், சுற்றத்தினர், நண்பரென்றவர்களிடம் காண்கின்ற நிகழ்ச்சிகள் அவர்களின் மனத்தைப் பக்குவப்படுத்தியுள்ளது. பெண்களில் பலர் இன்று பணிபுரிந்து வருகின்றனர். பணிக்களத்தில் எதிர்ப்படும் இன்னல்களை இன்முகத்தோடும், மனஉறுதியோடும் எதிர்க்கத்துணிந்துள்ளனர். சமவேலைக்குச் சம ஊதியம் என்று குரல் கொடுத்து வெற்றியும் பெற்று வருகின்றனர்.

www.tamilarangam.net

இந்திய சட்ட அமைப்பின் செயலாக்கங்களும் சரிசமமான பங்களிப்பை ஆணுக்கும், பெண்ணுக்கும் அளிக்க முன்வந்துள்ளன. நடைமுறைப்படுத்துவதில் ஏற்பட்டுள்ள சிரமங்களை இன்றைய பெண்கள் புரிந்து கொண்டு அதனைச் செயல்பட வைப்பதற்கான முயற்சியில் ஈடுபடவேண்டும். எந்த நிலையில், எந்தத் தொழிலை மேற்கொண்டாலும் தொழில் பக்தியும் சுத்தமும் நாட்டு நலனும் மேலோங்கப் பெண்கள் தொழிலில் செய்வார்களென்ற அளவில் தொழில் உரிமையைப் பெண்கள் பேணிக் காப்பார்கள். தொழிலில் ஈடுபடும் பெண்களுக்கு அவர்களது தேவைக்கேற்ப உதவுவதற்கு ஆண்களும் அரசும் முன்வர வேண்டும்.

## சொத்துரிமை

'பெண்கள் விடுதலை' என்ற தலைப்பில் பாரதிதாசன் பாடியுள்ள பாடலில் இருவரிகள் இப்படி அமைகிறது.

'பெண்டாட்டி என்ற பெயரடைந்த
நாள்முதலே
ஒண்டொடிக்கும் சொத்தில் ஒரு பாதி
உண்டுரிமை'

www.tamilarangam.net
என்பதாகும். பெண்கள் சொத்துரிமை குறித்துத் தனித்த பல சட்டங்கள் இன்று நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன. கணவன், மாமியார், உறவினர்களின் கட்டாயத் தேவைக்காகச் சொத்துக்களைப் பெறக் கையெழுத்து மட்டும் போட்டுக் கொடுத்துவிட்டு அதனை அனுபவிக்க முடியாமல் பெண்கள் வேதனைப்படும் நிலைமை மாறவேண்டும். பெண்களுக்கு வழங்கப்படும் சொத்துரிமையால் அவை கால காலத்திற்கும் காக்கப்படுகிறது. திட்டமிட்டு வரவுக்கு மீறாமல், அனாவசியமான செலவு கட்கு வகைவைக்காமல் காப்பாற்றப்படுகிறது. இத்னையெல்லாம் நினைத்து தன் பெண்களுக் கான சொத்துரிமை பற்றி நமது இந்திய அரசியல் சட்டத்தில் விரிவான சட்டமும், விளக்கமும் தரப்பட்டுள்ளது. பாட்டன், தகப்பன் சொத்தில் பெண்களுக்கும் பங்குண்டு என்ற எண்ணமே பெண்களைப் பற்றி மற்றவர்கள் உயர்வாக எண்ண இடமளிக்கிறது. சமூகத்தில் பொன் னாலும், பொருளாலும் சிலவற்றைச் சாதிக்கலா மென்ற கண்ணோட்டச் சிந்தனையும் ஏற்பட் டுள்ளது.

 www.tamilarangam.net

இந்திய சமுதாய வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால் பெண்கள் பலரும் அரசியலில் ஈடுபட்டு வெற்றிகண்டுள்ளமையைக் காண முடிகிறது.

"மகளிரெல்லாம் அரசியலைக்
கைபற்றி ஆண்டால்
மாநிலத்தில் போரில்லை
சாக்காடும் இல்லை"

என்பார் பாரதிதாசன்.

இருபதாம் நூற்றாண்டின் இறுதி ஆண்டுகள் ஓடிக்கொண்டிருக்கின்ற இவ்வேளையில், இன்றைய அரசியல் சூழலில் பாவேந்தர் பாரதிதாசன் வாக்கு நமது சிந்தனையை இப் பார்வையில் ஆழப்படுத்துகிறது. அரசியலில் பங்கேற்பதற்கும், பங்குகேட்பதற்குமான முழுத் தகுதியையும் பெண்கள் இன்று முழுமையாகப் பெற்றுள்ளனர். வீடு பெண்ணுக்கென்றும், வெளிஉலகு ஆணுக்கென்றும் வேலைப் பங்கிடு செய்யப்பட்ட சமுதாயம் இன்று மாறியுள்ளது. மானுட உரிமைகள் பொதுவானது. இனத்தின் பெயராலோ, மதத்தின் பெயராலோ, சாதியின்

www.tamilarangam.net



ஆண்களும் பெண்களும்
இந்தியாவின் இரு கண்கள்

www.tamilarangam.net

பெயராலோ, அன்றி பொருளாதார வசதிக் குறைவினாலோ பெண்கள் அரசியலில் ஈடுபடக் கூடாதென்ற காலம் மலையேறிவிட்டது.

சமுதாயத்தின் மொத்த எண்ணிக்கையில் ஐம்பது விழுக்காடாக விளங்கும் பெண்கள் வீடும் நாடும் அறிந்தவர்கள். சமுதாயத்தை வடிவமைப்பதிலும், வழிநடத்துவதிலும், வாழ் விப்பதிலுமாக உள்ள அவர்களது ஈடுபாடு அவர்களது பொறுப்புணர்ச்சியை அதிகமாக்கித் தரும். சட்டமன்றம், நாடாளுமன்றம், ஊர் மன்றம் எனப் பெண்கள் சென்றுவிட்டால் வீட்டையும், குழந்தைகளையும் கவனிப்பது யார் என்ற வினாவினை வீசி பெண்களின் அரசியல் உரிமைக்கொரு முற்றுப்புள்ளி, கேள்விக்குறி வைத்துவிடக்கூடாது. தொட்டில் ஆட்டுங்கைகளினால் வானையும், கோளையும் அளந்து தொல்லுலகத்தை ஆளவும் முடியும். பெண்களுக்கான இட ஒதுக்கீட்டில் 'ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால் அறிவில் ஓங்கி இவ்வையம் தழைக்க முடியும்' என்ற பாரதி வாக்கினை ஏற்பதே சரியாகும். இதனை, இதனால் இவர்களால் முடிக்க முடியுமா என்ற நம்பிக்கை வரலாற்றைப் புரட்டுவதுதான் முக்கியம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## என்ன உரிமை வழங்கலாம்? எப்படி வழங்கலாம்?

ஆணும் பெண்ணும் ஒருயிரின் இரண்டு கண்கள். இதில் ஒரு கண்ணுக்கு வெண்ணெயும் மற்றொரு கண்ணுக்குச் சுண்ணாம்பும் வழங்கு வதென்பது நியாயமில்லை. ஆணுக்கு அளிக்கப் பட்டு வரும் உரிமைகள் அனைத்தும் பெண் களுக்கு வழங்கப்படவேண்டும். எப்படி வழங்கு வது? யார் வழங்குவது என்ற பேச்சுக்கே இட மில்லை. மாறிவரும் காலச்சூழலில் இன்பம் நிறைந்த வாழ்வை அமைக்க வேண்டுமென்ற எண்ணம்தான் அதற்கு இலக்காக இருக்க வேண்டுமே தவிர வேறு எந்தக் குறுக்கீடும் வருதல் கூடாது.

## பெண்களை இழிவுபடுத்தும் போக்கு

அறிவியல் வளர்ச்சி விண்ணையும், மண்ணையும் இணைத்துக்கொண்டிருக்கும் இக்காலத்தில் நாட்டின் விளம்பரப் பொருட் களாகப் பெண்களை விளக்கும் போக்கு பெண்ணுரிமைச் சிந்தனைக்குக் களங்கம் ஏற்படுத்துவதுடன் மனவலியையும் ஏற்படுத்து கிறது.

www.tamilarangam.net

திரைப்படங்களில் வருகின்ற சில பாடல் வரிகள், பெண்கள் அணிகின்ற சில உடைகள், பெண்கள் நடத்தப்படும் போக்கு ஒரு நலமான சமுதாய வளர்ச்சியைக் காட்டுவதாக இல்லை.

'எழுதுகோல் தெய்வம் எண் எழுத்தும் தெய்வம்' 'எனக் கூறிய மகாகவிபாரதியை இக்காலத்தில் அதிகமாக நினைக்கத் தோன்று கிறது. எழுத்துக்கள் வழியாக, எழுதும் கருத் துக்கள் வழியாக, கருத்துகட்கு, படவடிவம் கொடுக்கும் வழியாகப் பெண்கள் கேவலப் படும் போக்கும் நிறுத்தப்பட வேண்டும்.

போகத்திற்கு உரியவர்களாக மட்டுமே பெண்களைச் சித்தரிக்கும் சகல சிந்தனை களும் ஆழக் குழிதோண்டி புதைத்துத் தீயிட்டுப் பொசுக்க வேண்டும்.

## பெண்- ஒரு இயக்கம்

பெண்ணுரிமை என்பது பேசியோ, எழுதியோ, படித்தோ, பயமுறுத்தியோ, சட்டத் தாலோ பெற முடியாது. நாம் விரும்பியோ, விரும்பாமலோ இன்று அடக்குமுறைக் கலாச்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சாரம் மேலோங்கியுள்ளது. தன்னைவிட ஒரு பெண் சாதனை புரியத் தயராகிவிட்டாள் என்ற சிந்தனையை ஏற்கக்கூட முடியாத கூட்டம் வளர்ந்துள்ளது. சுதந்திரச் சிந்தனையும், ஜன நாயகப் பங்கேற்பும் முறையாக வரவேற்கப் படாமல் இருக்கின்றன. தாய் மொழிச்சிந்தனை, தாய் மொழிக் கல்வி கேள்விக்குரியதாக மாறி வருகின்றது. சமுதாயத்தின் அடித்தளத்தில் குறைந்த கூலிக்கு உழைத்து வரும் பெண்கள் 'தங்களுக்குஎதிராக இழைக்கப்பட்டுவரும் கொடுமைகளை எதிர்க்கத் துணிந்துவிட்டனர். 'தனிமரம் தோப்பாகாது' என்பதை நினைந்து தாங்கள் ஒவ்வொருவரும் ஓர் இயக்கமாக மாறுவதென்று துணிந்து விட்டனர்.

ஒன்றுபடுவோம், போராடுவோம், வெற்றி பெறுவோம், வெற்றியின்மேல் வெற்றி பெறு வோம்' என்ற குரல் ஓர் இயக்கக் குரலாக ஒலிக்கத் தொடங்கிவிட்டது.

பெண்ணுரிமை பற்றிக் குரல் கொடுப் பவர்கள் சிலர் நடந்து கொள்ளும் மாறு பட்டபோக்கால் பெண்களைப் பற்றியே தவறாகக் கூறக்கூடிய போக்கும் இன்று வளர்ந் துள்ளது.

www.tamilarangam.net

'நாங்கள் உங்கள் வேட்டிகளைத் துவைக்கிறோமே, நீங்களும் ஏன் எங்கள் புடவைகளைத் துவைக்கக் கூடாது. நாங்கள் சமையல் செய்கின்றோமே. நீங்களும் ஏன் சமைக்கக்கூடாது என வாக்குவாதம் செய்து பெண்ணுரிமையை நிலைநாட்டமுடியாது. ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு, விட்டுக்கொடுத்து மதித்து, தேவைகளைப் பகிர்ந்து கொண்டு மகிழ்வாக நடப்பதில் மட்டுமே உரிமைகளால் பெருமைப்பட முடியும். நிறைவைக் காணமுடியும்.

நாட்டுவிடுதலை பெற்ற பொன்விழா ஆண்டில் இந்தியப் பெண்கள் கொடுமைகளை எதிர்த்துப்போராட, வெற்றிபெற அவர்களே இயக்கமாக மாறியுள்ளனர். நான்கு சுவர்களுக்குள் அடைபட்டுக்கிடந்த காலம் மலையேறிப் போய் நான்கு பேருக்காவது உதவியாக இருக்க வேண்டுமென்ற இயக்க உரிமைச்சிந்தனை இன்று ஓங்கியுள்ளது. பெண்களுக்காக அரசு அமைந்துள்ள அனைத்து நலத் திட்டங்களையும் புரிந்து கொண்டு தேவை உள்ளவர்கட்கு உதவும் இயக்கமாகத் தனிப்பெண் தனது உரிமையைப் பார்க்க வேண்டும். சமூக வளர்ச்சியினால்

www.tamilarangam.net

மட்டுமே பெண்கள் தங்கள் உரிமைகளை முழுமையாக அனுபவிக்க முடியும். பெண்ணுரிமை பேண விரும்பும் பெண்கள் ஓர் இயக்கமாக இயங்கவேண்டும்.

பெண்ணுரிமை என்பது வெறும் பிரச்சாரம் என்ற நிலைமாறி, அனுதாபப்பட வேண்டிய பிரச்சனை என்பது ஒழிந்து யதார்த்தமான, நடைமுறையில் பார்க்கும் நிலை வரவேண்டும்.

'எங்கும் சுதந்திரம்; நாம் எல்லோரும் சமம் என்ற நிலையை நாம் சட்டப்படி பெற்றிருந்தாலும் 'ஒவ்வொருவரும் சுதந்திரம் என்ற இல்க்கை அடையும் பொழுதுதான் உரிமைகளை முழுமையாகப் பெற முடியும். ஒவ்வொருவருக்கும் சுதந்திரம் என்பது அவ்வளவு எளிமையாக அடையக்கூடுமென்று எதிர்பார்க்கமுடியாது. தளராத முயற்சியுடன், விட்டுக்கொடுத்து நேர்மையான குறிக்கோளை முன்வைத்து, சுயக்கட்டுப்பாட்டுடன் மனிதர் நோக மனிதர் பார்க்காமல், வாழும் முறைமை அறிந்து வாழும்போது ஒவ்வொரு பெண்ணும் ஒரு இயக்கமாக இணைந்து செயல்பட வேண்டும். இதுவே பெண்ணுரிமை பெறுவதற்கான அடையாளம். குறியீடு.

★★★

www.tamilarangam.net

# சமூகக்கொடுமைகளை எதிர்த்துப் பெண்கள்

மனிதர்கள் சேர்ந்து உருவாக்கியது தான் சமூகம். மனிதன் இல்லாமல் சமூகம் இல்லை. சமூகம் இல்லாமல் மனிதன் இல்லை. மனிதன் என்று இங்கே குறிப்பிடுவது ஆண், பெண் இருவரையும் சேர்த்த கூட்டுச் சொல், செயல் என்ற அடிப்படை என்பதை ஒருபோதும் மறப்ப தற்கில்லை. இருவருக்கும் சமநீதி, ஒருநீதி, பொதுநீதி என்பதுதான் உண்மை. 'மனிதப் பிறவி' பாராட்டிற்குரியது. இரண்டு கண்களும் ஒரே இடத்தைப் பார்க்கும் பொழுதுதான் பார்வை முழுமை பெறுகிறது. ஒரு கால் மட்டும் செயல்பட்டால் அதைச் செயல்பாடு எனக் கூறமுடியாது. ஊனம் என்று கூறுவார்கள். இரண்டு கைகளும் இணைந்து வீசி நடக்க வேண்டும். இந்த உண்மைச் சிந்தனை இருவ ரிடமும் மாறாமல் இருந்த பொழுது இன்பம், இன்பம், இன்பம் மட்டுமே இருந்தது. இதி லிருந்து ஒரு சிறு நூலிழை மாற்றம் ஏற்படத்

www.tamilarangam.net

துவங்கியவுடன் கொடுமை தலைதூக்கத் தொடங்கியது. இந்தக் கொடுமையால் பாதிப்புக்கு உள்ளானவர்கள் பெண்களே.

## பெண்கள்.

'மங்கையராகப் பிறப்பதற்கே
நல்ல மாதவம்
செய்திட வேண்டுமம்மா'

என்று பாடி மகிழ்ந்தார் கவிமணி. உண்மையிலேயே இந்தப்பாடலுக்கு என்ன பொருள்? 'மாதவம்'செய்து எடுக்கவேண்டிய பிறப்புதான் பெண்பிறப்பா? சமூகத்தின் ஓரத்தில் இழிவென்று அழுத்தப்பட்டவளாகப் பெண் இன்றும் கருதப்படுகிறாளே. இது நியாயமா!

மனிதன் தோன்றிய காலந்தொட்டுப் பெண்களைத் தெய்வங்களாகவே மதித்து வணங்கி வந்திருக்கின்றார்களே. நாட்டையும் வீட்டையும் காக்கும் காவல் தெய்வங்களாக அவள் வணங்கப்பட்டது உண்மை தானே? பாசறைக் காவல் கூட அவள் மேற்கொண்டிருக்கின்றாளே! கட்டுக் காவல்களையெல்லாம் மீறி காடு மேடுகளையெல்லாம் தாண்டித் தன் கால்களுக்குச்

www.tamilarangam.net

சுதந்திரம் வழங்கித் திரிந்து நடந்து பாடி மகிழ்ந்து குலாவி நடமிட்டிருக்கின்றாளே!

பெண்ணுக்கு இல்லாத உரிமைகளா ?
அவளால் தீர்க்கமுடியாத சிக்கல்களா ?

அவளால் முடியும். அவள் எதையும் சந்திப்பாள். அவள் எதையும் சாதிப்பாள். காற்றிலேறி விண்ணைச் சாடுகின்றவர்களுக்குத் துணையாவள். அவள் வாழ்க்கைத்துணை. துன்பங்களை இன்பங்களாக மாற்றும் சக்தியே பெண்கள். நாட்டின் இலட்சியத் திருவிளக்குகள். இப்படித்தான் நம் நாட்டுப் பெண்கள் கருதப் பட்டார்கள்.

பெண்ணே ஆணை ஊக்குவிக்கும் சக்தி. மனிதனின் உயர்ந்த ஊக்கங்களுக்கு அவளே விளக்கு. அவளுக்குத் தன்னைக் காத்துக் கொண்டு மற்றவர்களையும் காப்பாற்றும் திறம் உண்டு. உண்மை, அன்பு, நீதி, சமத்துவம், சகோதரத்துவம் போன்ற அனைத்தையும் விளங்கிக் கொள்ளும் ஆற்றல் இயல்பாகவே பெற்றவள். இந்த எண்ணம் சமுதாயத்தில் இருக்கும் வரை சமுதாயச் சிந்தனைகள், செயல்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



www.tamilarangam.net

பாடுகள் ஆரோக்கியமானதாக இருக்கும். இந்த எண்ணங்களிலிருந்து அணு அளவு மாற்றம் எந்தப்பக்கமிருந்து வந்தாலும் கொடுமைகள் தலை தூக்கும் என்பது தான் வரலாறு. எந்தக் காலத்தையும் விடப் பெண்கள் இன்று பெரு மளவில் ஏற்றம் பெற்றுப் பாராட்டுப் பெறுமள வில் இருக்கிறார்களென்பது மறைக்கப்பட முடியாத உண்மை என்றாலும் சமூகக் கொடுமை களுக்கு எந்தக் காரணத்தையும் விட இன்று அதிக மாக ஆட்படுத்தப்பட்டு வருகின்றார்களென்ப தும் உண்மைதான்.

## பெண்கள் என்ன செய்யவில்லை?

ஆணும் பெண்ணும் சமமெனக் கருதிய காலம் உண்டு. வேதம் படித்தார்கள். சாத்திரம் கற்றார்கள். சவுகரியங்கள் செய்தார்கள். மைத் ரேயி, கார்க்கி போன்ற பெண்கள் இந்தப் பட்டிய லில் வருகின்றார்கள். ஆண்களுக்கு இணையான புலமை விளக்கத்தால் சமுதாயப் பாராட்டுப் பெற்றார்கள்.

இந்த நாட்டில் இன்று பெண்களுக்கு இல்லாத உரிமைகளா? படிக்கவில்லையா?

www.tamilarangam.net

வேலை செய்யவில்லையா? ஓட்டுப்போட வில்லையா? திரைப்படங்களுக்குச் செல்ல வில்லையா? அரசியலில் ஈடுபடவில்லையா? தலைமைப் பொறுப்பை ஏற்க வில்லையா? கிராமத் தலைமை, நகரத் தலைமை, மாவட்டத் தலைமை, மாநிலத் தலைமை எனப் பொறுப்பு களை ஏற்கவில்லையா? பல்கலைக்கழகப் படிப்பு வரை வாசம் பிடித்து நீள, நீளப் பட்டங்களைப் பெற்று வருகின்றார்கள். வானத் தில், ஆழ்கடலில் பணி புரியவில்லையா? என்ன தொழிலில் பெண்கள் ஈடுபடவில்லை?

சிறுமியாக மணம் செய்து கொடுப்பது நிறுத்தப்பட்டுள்ளது. இருபத்தோரு வயதில் தான் பெண்ணின் திருமணம் நிச்சயிக்கப் படவேண்டுமென ஓடுகின்ற வாகனங்களெல்லாம் உறுதி செய்து சொல்லிக் கொண்டே ஓடுகின்றன

குழந்தை பெறுவது மட்டுமே
வாழ்க்கையல்ல.
அடுப்படி மட்டுமே பெண்ணின்
இருப்பிடமல்ல.
அவள் கைம் பெண் என்று முடங்கிக்
கிடக்கமாட்டாள்.

www.tamilarangam.net

வாழா வெட்டி என்று ஒதுங்கி
நிற்கமாட்டாள்.
மலடி என்ற பட்டத்தைச் சுமக்க மாட்டாள்.

இன்று இவையெல்லாம் நியாயங்க ளில்லை என்று சட்டபூர்வமாகவும், மனச் சிந்தனைத் தீர்வு அடிப்படையிலும், மனிதநேய உறவின் போக்கிலுமாகத் தீர்மானிக்கப் பட்டுள்ளன. குடும்பம், திருமணம், மகப்பேறு, ஆதிக்கம் என்ற பிணைப்புகளிலிருந்து எவ் வகைக் கொடுமைகளும் பெண்களுக்கு நேர்ந்து விடக்கூடாது. எல்லா முகங்களும் உண்மை போலிருக்கின்றன. ஆனால் முழுவதும் அப் படியே என நம்பமுடியாத சூழ்நிலையும் உருவாகி இருக்கிறது. ஓர் ஆண்தான் ஒரு பெண்ணைக் காப்பாற்ற வேண்டும் என்ற போலித்தனமான நம்பிக்கை சமூகத்தில் தலை தூக்கிவிட்டதால் பெண்ணுக்குக் கொடுமைகள் பல சமூகத்தில் ஏற்படத் தொடங்கி விட்டன. பெண் பலவீனமானவள். அந்தப் பலவீனத்தை யாரும், எப்படியும் பயன்படுத்திக் கொள்ள லாம். சமுதாயம், நாடு, பொருளாதாரம், சமயம் எனப் பல்வேறு காரணங்களால் பெண்களை அடிமைப்படுத்தி விடலாம். எந்த நாளிலும் எல்லாப் பெண்களும் சரிநிகர் சமமான நிலைக்

www.tamilarangam.net

குச் சமுதாயத்தில் வரமுடியாது. சகல விளைவு களுக்கும் பெண்களே காரணம் எனக் கூறி அவளுக்கு எல்லையில்லாத கொடுமைகளை விளைவிக்கலாம். அதில் கொடூரமான மகிழ் வையும் காணலாம் என்ற எண்ணம் எப்படியோ சமூகத்தில் நுழைந்துவிட்டது.

## சமூகக் கொடுமைகள்

இது தான் சமூகக் கொடுமை என எண்ணிப் பார்க்க முடியாத அளவுக்கு இன்று எண்ணிக்கை யில் கொடுமைகள் பெருகி வந்துள்ளன என்பது உண்மை.

நிலம், நீர், காற்று, வான், தீ ஆகிய இயற்கைச் சக்திகளை அறியாத மனித சமுதாயம் பெண்ணையும் ஒரு சக்தியாகப் பார்த்துப் பெருமைப்பட்ட நிலையிலிருந்து மாறி அவளைப் புதிராகப் பார்க்கத் தொடங்கியது. பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமை களுக்கான தொடக்கம் எது, முடிவெது எனத் தெரிந்து கொள்ள முடியாத அளவுக்கு இன்று கொடுமைகள் வளர்ந்துள்ளன. வீட்டுவேலை கள், வெளிவேலைகள் எனப்பிரித்துப் பார்க்காது, வேலைகளைச் சுமையாகக் கருதாமல் பொறுமை

www.tamilarangam.net

யோடும், சகிப்புத் தன்மையோடும், விட்டுக் கொடுக்கும் மனப்போக்கோடும், நடந்து வருகின்ற பெண் பல சமூகக் கொடுமைகளைச் சந்திக்கின்றாள். ஒவ்வொரு நாளும் சிலுவையில் அறையப்பட்டு மறுநிமிடம் உயிர்த்தெழுந்து மறந்து, மன்னித்துப் பெருந்தன்மையோடு வாழும் எண்ணம் இயற்கையே அவளுக்கு அமைத்துத் தந்து பெருஞ்சிறப்பு செய்வதாக உள்ளது.

## கொடுமை என்றால் என்ன?

தன்னால் தாங்கிக் கொள்ள முடியாத துன்பத்தைச் செய்வது கொடுமையாகும். இயல்பான நிலையை வழங்காது, மனசாட்சிக்கு மதிப்பளிக்காது செயற்கையான துன்பத்தைச் செய்வது கொடுமையாகும். கண்களிலிருந்து வழியும் கண்ணீரின் சூடு தாங்கமுடியாது, உணர்வும், உயிரும், இரத்தமும் சூடேறி தன்னால் நம்பமுடியாத, நினைத்துக்கூடப் பார்க்க முடியாத முடிவுக்குச் சென்றுவிடுகின்றாள். இந்த நிலையை எட்டச் செய்வது தான் கொடுமையின் கொடுமுடியாகும்.

## பிறப்பே கொடுமை

ஒரு பெண் கருவாக உருவானது முதல்

www.tamilarangam.net



www.tamilarangam.net

கல்லறைக்குள் போகும் வரையில் எண்ணற்ற கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டு வேதனை களை அனுபவித்து வருவதை இன்றுயாரும் மறுப்பதற்கில்லை. அறிவியல் வளர்ச்சியில் பெண் குழந்தையென்பதைக் கருவிலேயே கண்டு கொண்டு பெண் குழந்தையாக இருந்தால் கருவிலேயே அது அழிக்கப்படும் கொடுமை இன்று அதிகரித்து வருகிறது. இதனை யாரும் மறுப்பதற்கில்லை. இந்தக் கொடுமை தடுத்து நிறுத்தப்படவேண்டுமெனப் பலரும் குரல் கொடுத்து வருகிறார்கள். எழுதி வருகிறார்கள். பேசி வருகிறார்கள். முழங்கி வருகிறார்கள். இவ்வாறான நிலையை உருவாக்குகின்றவர் களின் மீது சட்டப்படி நடவடிக்கை எடுப்பதற் கான முயற்சி கூட இன்று எந்தப்பக்கமிருந்தும் எடுக்கப்படவில்லை. பெண் குழந்தை பிறப் பதைத் தடுப்பவர்களை நினைத்துக் கோபப்படு வது, பெண் குழந்தை கருவிலேயே நசுக்கப்படு வதற்காகப் பரிதாபபடுவது, முதலைக் கண்ணீர் விடுவது போன்ற போலிச் செயல்கள்தான் மிகுந் துள்ளனவே தவிர தீர்வுக்குரிய வழிகளை யாரும் கூறி செயல்படுத்தவியலாது உள்ளனர்.

www.tamilarangam.net

## பெண் சிசுக் கொலைக் கொடுமை

பெண் குழந்தை பிறந்தவுடன் அந்தக் குழந்தை தேவை இல்லையெனத் தந்தை கருதி னால் அந்தக் குழந்தையைக் கொடூரமான முறை யில் கொன்றுவிடும் 'சிசு கொலை'நடந்து வரு வதை நாமறிவோம். ஏதும் அறியாத ஒரு சிசு பெண்ணாகப் பிறந்துவிட்டதற்காக சமூக தண்டனையாக விசாரிக்கப்படாமலேயே, யார் செய்த தவறுக்காகவோ யாரோ தண்டிக்கப் படுவது போன்ற கொடுமை இன்று பெண் ணுக்கு அளிக்கப்படுகிறது. பெண்சிசுக் கொலைக்குக் காரணமானவர்கள் இன்னாரென அறிந்தும் அவர்கட்கு எவ்விதமான தண்டனை யும் வழங்கப்படுவது இல்லை. ஏதாவதொரு தவறு, யாராவது செய்துவிட்டால் ஊரே கூடித் தண்டனை வழங்கும் நிலை இன்று இருந்தும் பெண் சிசுக் கொலை செய்து கொலைக் குற்றம் செய்தவர்கள் தண்டிக்கப்படாமல் இன்று நாட்டில் நடமாடி வருவது அனைவரும் அறிந்ததே. இந்தச் சமூகக் கொடுமை எந்தக் காலத்தையும் விட இன்று அதிகமாக நிலவி வருகிறதென்பதைப் புள்ளிவிவரங்கள் கூறு கின்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## குழந்தை விற்பனைக் கொடுமை

'கீரையோ கீரை'யெனத் தெருவில் விற்பது போலப் 'பிள்ளையோ பிள்ளை'எனப் பொதுவாகப் பிள்ளை விற்பனை அதிகமாக இன்று நடந்து வருகிறது. அதிலும் பெண் குழந்தை விற்பனை தனிநபர் வழியாகவும், அனாதை நிலையங்கள் வழியாகவும் நடந்து வருகின்றன.

## தெருவில் வீசி எறியும் கொடுமை

பெண் குழந்தைகளைத் தவறான வழிகளில் பெற்றவர்கள் தெருவோரங்களில், குப்பைத் தொட்டியில், முட்புதர்களுக்கிடையில், மருத்துவமனையில், அனாதை இல்லங்கள் முன்பு வீசிவிட்டுச் செல்லும் கொடுமைகளும் நிகழ்ந்து வருகின்றன. இத்தகு கொடுந்தொழில் புரிவோரைக் கண்டுபிடித்துத் தண்டனைகள் வழங்குவதற்குப் பதிலாகக் குழந்தைகள் மீது இரக்கங் காட்டி வளர்ப்பதற்கான வழி வகைகள் செய்யப்படுகின்றனவே தவிர இக்கொடுமை செய்வோரைத் தண்டனையிலிருந்து தப்புவிக்கும் முயற்சிக்கு ஆதரவு காட்டப்பட்டு வருகிறது.

www.tamilarangam.net



www.tamilarangam.net

## பெண் குழந்தை வளர்ப்பில் வேறுபாடு காட்டும் கொடுமை

குழந்தைகள் வளர்ப்பில் கூடப் பெண் குழந்தையென்றால் வேறுபாடு காட்டும் கொடுமை மிகுந்துள்ளது. உணவில், உடையில், கட்டுப்பாட்டில், வேலையில், கல்வியில், சலுகைகள் வழங்குவதில் வேறுபாடு காட்டப் படுகிறது. குறிப்பாகப் பெண் குழந்தைகளை அதிகம் வேலை வாங்கும் போக்கு மிகுந்துள்ளது. முதலாவது வகுப்புப் பாடப்புத்தகத் தில் கொடுக்கப்பட்டுள்ள படம், அளித்துள்ள விளக்கம் கூட இதற்குச் சான்றாக விளங்குகிறது. ஆண் குழந்தை விளையாடிக் கொண்டிருப்பான். பெண் குழந்தை அம்மாவுக்கு உதவியாக வீட்டு வேலைகள் செய்வாள். அல்லது சின்னக் குழந்தை யைத் தூக்கிவைத்துக் கொண்டிருப் பாள். இது போன்ற செயல்கள் பெண்ணினத் தையே கொடுமைப்படுத்துவது போன்ற செய லாகும்.

## கல்வி தருவதிலும் கொடுமை

ஆண்களுக்கு நிகராகக் கற்பது- அவர் களைவிட அதிகமாகக் கற்பது என்ற நிலை

www.tamilarangam.net

அதிகமாக இன்று வளர்ந்து வந்திருப்பது உண்மையே. எனினும், வீட்டுத் தேவைகளையும், பொருளாதாரச் சூழலையும், அடுத்த வீட்டுக்கு அனுப்பப்பட வேண்டிய பெண்தானே எனும் எண்ணத்தில் படிப்பைப் பாதியிலேயே நிறுத்துவது போன்ற சமூகக் கொடுமைகள் இன்றும் அதிகமாகவே காணப்படுகிறது. வயது வந்த பெண் குழந்தைகட்குத் தேவையற்றக் கட்டுப்பாடுகளை விதித்து அவர்களது எண்ணத்தையே முடமாக்கி விடுகின்றனர். சுதந்திரம் பறிக்கப்படுகிறது. கல்வி கற்றுத் தருவதிலும் வேறுபாடு காட்டப்படுகிறது. சாதாரணமாகப் படித்தால் போதும், தாய்மொழிவழிப் படித்தால் போதும், சாதாரணமாகப் பட்டவகுப்பு படித்தால் நல்லது போன்ற எண்ணத்தை விதைத்துச் சுய சிந்தனைக்கே கட்டுப்பாட்டை விதித்து விடுகின்ற சமூகக் கொடுமைகள் எங்ஙனும் காணப்படுகின்றன. தொழிற்கல்வி - குறிப்பாகப் பொறியியல் கல்வி பயிலுகின்ற பல பெண்கள் படித்த படிப்பைச் சமுதாயத்தின் உயர்வுக்காகப் பயன்படுத்தாமல் வீட்டிலேயே வளைய வருவதற்கும், திருமண அழைப்பிதழில் தங்களது கல்வித்தகுதி குறித்துக்குறிப்பிடவும் மட்டுமே பயன்படுத்தும்

www.tamilarangam.net

சமூகக் கொடுமைகள் இன்றும் நிகழாமல் இல்லை. பெண்கள் படித்துவிட்டால் அதற்கு மேல் படித்த மாப்பிள்ளைகளைத் தேட வேண்டியிருக்கிறதென்ற கவலையிலும் சிலர் பெண் கல்விக்கு முற்றுப்புள்ளி வைத்துவிடுகின்றனர். கல்வியைக் கலைமகளாகப் பெண் வடிவத்தில் காணும் இந்தச் சமூகம் பெண்ணுக்கு கல்வி கொடுப்பதில் ஊனமுற்றுக் காணப்படுகிறதென்பது உண்மை. சமூகத்தில் செம்பாதிப் பெண்கள் இன்று கல்வி கற்கின்றார்கள். பாதிப் பேர் படித்து, பாதிபேர் படிக்காமல் இருப்பதால் சமவிகித அளவுக்கான உரிமைகள் மறுக்கப் பட்டு வருவதைக் காணமுடிகிறது. ஒரு சமுதாயம் நூற்றுக்கு நூறு நாகரிகமான சமுதாயம் எனக் கருதப்பட வேண்டுமானால் 'எல்லோருக்கும் கல்வி' என்ற இலக்கிலே வெற்றி பெற வேண்டும். பட்டம் பெறுகின்ற கல்வியைப் பெறாவிட்டாலும், எழுதப் படிக்கத் தெரிகின்ற கல்வியைப் பெறவும், கையெழுத்துப் போடுகின்ற அளவுக்கான கல்வியையாவது பெறவும், அன்றாட நாட்டுச் செய்திகளை இதழ்கள் வாயிலாக அறிகின்ற கல்வியையாவது பெண்கள் பெற வேண்டும். யாரும், எவ்வழியிலும் ஏமாற்றாத அளவுக்கான கல்வியைப் பெறுவது

www.tamilarangam.net

என்பது பெண்களது உரிமையாகும். விடுதலை பெற்றத் திருநாட்டில் அனைவருக்கும் கல்வி என்று கூறுவதில் பெண்களும் உள்ளடங்கிய வர்களென்பது உண்மையாகும். முறையான கல்வி, முறைசாராக் கல்வி, தொடர் கல்வி, வாழ்க்கைக் கல்வி, முதியோர் கல்வி கற்பதென்பதில் பெண்களுக்கும் முழுப் பங்கு அளிக்க வேண்டும். ஒரு பெண் கல்வி கற்றால் அந்தச் சமுதாயமே கல்விக்கண் பெறுகிற தென்பது தான் உண்மை.

## திருமணக் கொடுமை

திருமணத்தின் பெயரால் பெண்களுக்கு சமூகம் இழைத்து வரும் கொடுமைகள் சொல்லி முடியாது. தனக்கு விருப்பமான இளைஞனைக் கணவனாக ஏற்கும் உரிமை பெண்களுக்கு மறுக்கப்படுகிறது. திருமணச் சந்தையில் விற் பனைப் பொருளாக, காட்சிப் பொருளாகப் பெண்கள் காட்டப்படுகின்றனர். கட்டுப் பாட்டோடு வளர்ந்து வரும் பெண் பார்க்கும் படலம் என்ற பெயரில் முன் பின் தெரியாத வர்களுக்கு மத்தியில் அலங்காரப் பதுமையாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net
உலா வருவது, அவர்கள் கேட்கும் கேள்வி களுக்குப் பதிலளிப்பது, உணவு தருவது, பாடு வதுபோன்ற கொடுமைகளெல்லாம் சாதார்ண நிகழ்ச்சிகளாக அமைந்துவிட்டது.

வரதட்சணை என்ற பெயரால் பெண்களை விற்பது, பொன்நகை, வெள்ளிப்பாத்திரங்கள், சமையல் பாத்திரங்கள், மரச்சாமான்கள், துணி மணிகள், வாகனங்கள், வீடு, நிலம், வங்கிப் பணம் என அனைத்தும் பெறும் வாணிபச் சந்தையாக திருமணம் ஆகிவிட்ட சூழ்நிலைகள் நடைபிணங்களாக்கப்படும் கொடுமைகள் நடந்து வருகின்றன. தன் விருப்பம், ஆசை, சுதந்திரம், கனவுகள் யாவற்றையும் மீட்கமுடியா மல் அடகு வைத்துவிட்டுப் பெண் கணவன் வீட்டுக்குச் செல்லும் நிலை இன்று உருவாகி யுள்ளது. புதிய சூழ்நிலையில் பயந்து, நடுங்கி, அடங்கி, ஒடுங்கி நடக்கும் பெண் தன் சுய சிந்தனைகள் மழுங்கிப் போக நடைபிண மாகிறாள். மாப்பிள்ளை வீட்டாருக்குப் பயந்து நடக்கும் சூழலில் என்ன செய்வதென அறியாத சூழல் உருவாகிவிடுகிறது. தான் செய்கின்ற சின்னச்சின்ன வேலைகள் கூடப் புகுந்த வீட்டா ரால் தவறாகக் கணிக்கப்பட்டு எதிர்பாராத பல



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முடிவுகளும் ஏற்பட்டு விடுகின்றன. பெண் சிசுக் கொலை எப்படி நடக்கிறதோ அது போலவே திருமணக் கொலைகளும் இன்று நடைபெற்று வருகிறது. போதுமான அளவு வரதட்சணை கொண்டு வரவில்லையென்ற பெயரால் பெண்கள் உயிரோடு எரிக்கப்படுவது, மனநோய்க்கு ஆளாவது, செயல்படமுடியாத தேக்க நிலை உருவாவது, எதைக் கண்டும் பயப்படும் பதட்ட நிலை உருவாவது போன்ற மனச்சிதைவு நோய் ஏற்படுவது போன்ற அநீதிகள் பெண்களுக்கு இன்றைய சமூகம் மிகப் பெருந் தண்டனைகளாக வழங்கி வருகிறது என்பது உண்மை. திருமணம் என்பது இருமன ஒருமைப்பாடு என்ற நிலை மாறி வணிகச் சிந்தனை மேலோங்கி நிற்கிறது என்பதே உண்மை. வேண்டாத பிரச்சினைகளை உருவாக்கிப் பெண்களைக் கண்ணீர் சிந்த வைக்கும் கொடுமையை இன்று சமூகம் அதிகமாகவே உருவாக்கித் தந்துள்ளது. இதனால் குறிப்பிட்ட வயதில் திருமணம் மேற்கொள்ள முடியாது தள்ளிப்போடும் நிலை ஏற்பட்டுள்ளது. மனப் பொருத்தம் பார்ப்பதென்பது குறைந்து பணப்பொருத்தம் பார்ப்ப

www.tamilarangam.net

தால் அதிகமான சமூகக்கொடுமைகளுக்குப் பெண்களே ஆளாகி உள்ளனர்.

## குறைபாட்டுக்குரியவர்களாகப் பெண்களைக் காட்டும் கொடுமை

ஒரு குடும்பத்தில் என்ன குறைபாடு நேர்ந்தாலும் அதற்குக் காரணம் பெண்களே எனக் கூறும் நிலை இன்று பெருகி வந்துள்ளது. திருமணமானவர்கட்குக் குழந்தை பிறக்க வில்லையென்றால் அதற்குக் காரணமாகப் பெண்கள்தான் குறையாகக் கூறப்படுகிறார்களே தவிர ஆண்களை யாரும் குறைகூறுவதில்லை. ''மலடி'' என்ற பெண்பாற் சொல் அகராதியில் காணப்படுகிறது - குழந்தை இல்லாதவள் எனப் பொருள் சொல்லப்படுகிறதே தவிர இதற்கு இணையாக ஆண்களைக் குறிக்கும் சொல் இல்லாததே இந்த வேறுபாட்டைக் காட்டுவதாக அமையும். மகப்பேறில்லாக் குறைக்குக் காரணம் ஆண் மகனாக இருக்கலாமா என்ற சோதனைக்கு உட்பட மருத்துவரை நாடக்கூட ஆண்கள் சம்மதிப்பதில்லை. வீட்டிலும், உறவி லும், ஊரிலும் ஏச்சுக்கும், பேச்சுக்கும் பெண் தான் ஆளாக்கப்படுகின்றாள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


ஆபாச படங்களை
தடை செய்யுங்கள்
பெண்களை இழிவு
செய்யாதீர்கள்

www.tamilarangam.net

குழந்தை பெறாத பெண் மற்ற குழந்தை களைப் பார்ப்பது, தூக்கி எடுத்துக் கொஞ்சுவது கூடக் கொடுமையாகக் கருதப்படுகிறது. ஆண் களைப்பற்றி அப்படி நினைப்பது கூட இல்லை.

இதைப்போலவே திருமணத்திற்குப் பிறகு வீட்டில் ஏதாவது விரும்பத்தகாத சிறு சம்பவங் கள் நிகழ்ந்து விட்டதென்றால் அதற்குக் காரணம் வீட்டில் உள்ள பெண்ணோ, வந்த பெண்ணோ, அவள் பார்வையோதான் குறைபாட்டுக்குக் காரணம் என சமூகம் நினைக்கத் தவறுவது இல்லை.

சமூகத்தில் உலவிவரும் தீய பழக்க வழக்கங் களுக்கு ஆளான ஆண்மகன் நோய் வாய்ப் பட்டால், அல்லது இறக்க நேர்ந்தால் அதற்கும் பெண்களே காரணமென இச்சமூகம் இன்று சுட்டிக்காட்டத் தவறுவதில்லை.

கணவனைச் சார்ந்து, கணவன் குடும்பத் தைச் சார்ந்து தன் விருப்பு, ஆசைகளை நிறை வேற்றிக் கொள்ள மட்டுமே பெண்ணுக்கு உரிமை உண்டு. இத்தகு சமூகச் சிந்தனைகள்,

கொடுமைகள், அநீதிகள் பெண்களுக்கு இழைக்கப்பட்டு வருகிறதே தவிர குறையவில்லை.

## வேலைப்பளுவினால் ஏற்படும் கொடுமைகள்

வேலை பார்க்கும் பெண்கள் வீட்டிலும், வேலை பார்க்கும் இடத்திலும், பொது இடங்களிலும், சந்திக்கும் கொடுமைகளுக்கு எல்லையே இல்லை.

ஆலையிலும், கல்விச் சாலையிலும், வயல் வெளியிலும், வேறு பணிகளிலும் ஈடுபடும் பெண்கள் எதிர் நோக்கும் கொடுமைகள் இன்று அளவில் பெருகிக்கொண்டே போகின்றன.

ஒரு நாளைக்குப் பதினாறு மணிநேர வேலைகளில் இயந்திரமாகப் போகும் பெண்ணுக்கு சமூக அங்கீகாரம், சமூக உயர்வு கிடைக்கவில்லையென்றாலும் பல்வேறு வகையான சமூகக் கொடுமைகளை அனுபவிக்க வேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்படுகிறாள். பணி புரியும் பெண்கள் தங்களது பணியின் தன்மைக்

www.tamilarangam.net

குத் தக சமுதாயத்தில் பழக வேண்டிய சூழலில் இருப்பதால் அதனால் அவள் வீட்டிலும், வெளியிலும் சந்திக்கும் இடர்ப்பாடுகள் அவளை மீளமுடியாத வேதனைக் குழியில் தள்ளி விடுவதாக அமைந்துவிடுகிறது. மனம் பார்க்க மறுக்கும் சமூகக் கொடுமைகளால் தாக்கப்படும் பெண் நிமிர்ந்து நிற்கவும் முடியாமல் கூனிக் குறுகிப் போகிறாள். பெண் என்றாலே கேலிக் குரியவர்களென்ற போக்கு இன்றைய சமூகத்தில் மேலோங்கி வளர்ந்து வருகிறது. தனக்குரிய நிலைக்காக அவள் தினமும் போராட வேண்டி யிருக்கிறது. எதிர்த்துக் குரல் கொடுப்பது, இயக்கமாவது, தன்னையொத்தப் பெண் களுடன் இணைவது, போராடுவது, வெற்றி பெறுவது என்ற இலட்சியத்திலிருந்தெல்லாம் விலகி ''பெண்ணென்று பூமிதனில் பிறந்து விட்டால் மிகப் பீழை இருக்குதடி'' என நொந்து கொள்ளும் அளவிற்குச் சமூகம் அவளுக்குக் கொடுமைகள் இழைத்து வருகிறது.

## சமூகத் தொடர்பு சாதனங்கள் வழி தொடரும் கொடுமைகள்

பெண்கள் வீட்டில் முடங்கிக் கிடக்கும்

www.tamilarangam.net

நிலையில் சிறிது மாறுதல் ஏற்பட்டுள்ளது. இது உண்மைதான். ஆனால் அதே பொழுதில் எந்தக் காலத்தையும் விடப் பெண்கள் இன்று பல்வேறு சமூகக் கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டு வருகின்றார்களென்பது உண்மை. பெண்களை ஆபாசப் பொருளாக்கி விளம்பரப்படுத்துவதென்பது பெண்ணினத்திற்கே இழைக்கப்படும் அவமானமும், மன்னிக்கமுடியாத அநீதியான செயலுமாக உள்ளன. விளம்பரம் என்ற பெயரால் பெண்களுக்கு இயல்பாக இருக்க வேண்டுமெனக் கருதப்படும் குணங்கள் கூடக் கேவலப்படுத்தப்படுகின்றன. எந்தப் பக்கம் திரும்பினாலும் ஆபாசம் நிறைந்த சுவரொட்டிகள், அரை, குறை ஆடையுடன் கூடிய விளம்பரப் பதுமைகளாகப் பெண்கள், எந்தவிதத் தொடர்புமில்லாத பெண்கள் படம் போட்ட விளம்பரங்கள், பெண்களைக் கேவலப்படுத்தும் வாசகங்கள் இன்று மலிந்துவிட்டன.

அறிவியல் வளர்ச்சியில் பெருமைப்படத்தக்க நிலையில் விளங்கும் திரைப்படம், தொலைக்காட்சி வரிசைகளில் பெண்கள் சிந்தனையாலும், அரை குறை உடையாலும், ஆபாசம் நிறைந்த இரட்டைப் பொருள் கொண்ட

www.tamilarangam.net

வசனங்கள், பாடல்கள், கவிதைகளால் பெண்கள் மிகையாகவே கொடுமைப்படுத்தப்படுகின்றனர்.

பெண்களைக் கேவலப்படுத்திக் காட்டுவதற்காகவே வெளிவரும் மஞ்சள் பத்திரிகைகள், பெண்களை ஓவியங்களாகத் தீட்டிக்காட்டுவதாகக் கூறி வரையும் அரைகுறைப் படங்கள், கவர்ச்சிக் கன்னி, இரவுக்கன்னி என்றெல்லாம் எழுதும் போக்குகள் பெருகியிருக்கின்றன. பாடல்கள், கவிதைகள் என்ற போர்வையில் பெண்மைக்குரிய தடத்திலிருந்து மாறி தன்னைப் பெற்றவள் ஒரு பெண் தனக்கு சமபங்கு கொடுப்பவள் ஒரு பெண். தன்னைத் தந்தையாக்கிப் பெருமைப்படுத்திய மழலை ஒரு பெண், உடன் பிறந்த பாசத்தை உணரவைத்தவள் ஒரு பெண் என்பதை மறந்து எழுதும் எழுத்துக்கள் சமூகக் கொடுமையின் உச்ச நிலைக்குப் பெண்களை அழைத்துச் செல்லுகின்றதென்றே கூறவேண்டும். 'ஒருவனுக்கு ஒருத்தி' என்ற உன்னத நிலையினை மீண்டும், மீண்டும் வற்புறுத்துவதை விடுத்து இருதாரமணம், சின்ன வீடு, ஆசைக்கு, தகுதிக்கு என்றெல்லாம் பெண்களை சக்தியற்றவர்களாகக் காட்டும் சமூகக்

www.tamilarangam.net
கொடுமைகள் இந்தக்காலத்திலும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பச்சிளம் பெண் குழந்தைகளைப் பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்திக் கொடுமைப்படுத்தும் ஆண் வர்க்கப்பேய்களைத் தூக்கில் அல்லவா போடவேண்டும். தனக்கிழைக்கும் சமூகக் கொடுமைகளை எதிர்த்துக் குரல் கொடுக்கக் கூட முடியாமல் பெண்ணின் குரல்வளை ஓங்கி நசுக்கப்பட்டு வருகிறது.

## பெண்களுக்கு அமைப்பு ரீதியாக இழைக்கப்படும் கொடுமைகள்

வர்க்கம், சாதி, மதம், சமயம் போன்ற வகைகளாலும் பெண்களுக்கு எதிராகக் கொடுமைகள் இழைக்கப்படுகின்றன.

மூட நம்பிக்கைகள், வாழையடி வாழையாக வளர்க்கப்பட்டு வரும் நம்பிக்கைகளும் இதற்கு இணையாகின்றன.

## சமூகக் கொடுமைகளிலிருந்து பெண்கள் விடுபட

பெண்களுக்குச் சமூகம் கொடுமை செய்து

www.tamilarangam.net
விட்டது. துரோகம் இழைத்துவிட்டது என ஓங்கிக் குரல் கொடுத்துக் காரண காரியங்களை விளக்குவது எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் சமூகக் கொடுமைகளிலிருந்து விடுபட உழைப்பது ஆகும்.

மூத்த பொய்மைகளை அழித்து மூடக் கட்டுகளைத் தகர்க்க ஒவ்வொரு பெண்ணும் தன்னம்பிக்கையை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

★ ஒன்றுபட்டுச் செயல்படவேண்டும்

★ பெண்களைப் பெண்களே பழிவாங்கவோ கொடுமைப்படுத்தவோ கூடாது.

★ ஒவ்வொரு பெண்ணும் ஒரு இயக்கமாக மாறவேண்டும்.

★ பெண்களை இழிவு செய்யும் தகவல் தொடர்பு சாதனங்களைத் தகர்த்தெறிய வேண்டும்.

www.tamilarangam.net

★ பெண்களின் மீது யாரும் எத்தகைய கருத்தையும் வலுவாக அவள் விருப்பத்திற்கு மாறாகத் திணிக்கக் கூடாது.

★ பெண்கள் ஒதுங்கி வாழக்கூடாது

★ ஆண்களைத் தங்கள் எதிரிகளாகப் பார்க்காமல் ஆண்களும், பெண்களும் இணைந்து சமுதாய உயர்வுக்குப் போராடும் சிந்தனையை வளர்க்க வேண்டும்.

★ எந்த ஒரு பகுதியில் பெண்களுக்கு அநீதி இழைக்கப்பட்டாலும் சாதி, மத, இன, சமய வேறுபாடின்றிப் பெண்கள் ஒன்று திரண்டு நியாயம் கேட்கவேண்டும்.

★ கல்வி, தொழில், சொத்து அனைத்திலும் பெண்களும் சமவாய்ப்புப் பெற வேண்டும்.

★ பெண்களை அடிமைப்படுத்த எண்ணும் மத, சமயக் கோட்பாடுகளைத் தகர்த்தெறிய வேண்டும்.

www.tamilarangam.net

★ தங்கள் மீது கட்டாயப்படுத்தித் திணிக்கப் படும் எதையும் ஏற்கக்கூடாது.

★ பெண்ணைப் பெருமைப்படுத்தி, அவள் கடமைகளைச் சுட்டிக்காட்டிச் செயல்பட வைக்கும் புதிய இலக்கியங்களை வளர்க்க வேண்டும்.

★ பெண்களைக் கேவலப்படுத்தும் எந்த எழுத்துக்களையும், பழமொழிகளையும் வளரவிடக் கூடாது.

இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம். சமூகக் கொடுமைகளை இனங்கண்டு அவற்றை எதிர்க்கவும், ச் சொல்லும் செயலும் இணைந்த புதிய சமுதாயம் படைக்க முனையவேண்டும். பெண் தன் சக்தியை உணர்ந்து உணர்த்த வேண்டும். தனிமனித இனமோ, கூட்டமோ, சமுதாயமோ சமூகக் கொடுமைகளைத் தங்கட்கு இழைக்க எண்ணக்கூடாது. ஒருவேளை அப்படி நடப்பதில் சிறிது மாற்றமிருப்பின் பொறுமை. புலியாகி பொய்க்கும் கலியைக் கொன்று வாகை சூடும் என்பதே உண்மை.

★★★

www.tamilarangam.net

www.tamilarangam.net

# பெண்மையும் வீரமும்



முனைவர் திருமதி சு.சிவகாமசுந்தரி

பாவை பப்ளிகேஷன்ஸ்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்